12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 30—7—1978 | இதழ் 47

புனித ராஜ்யம்

காட்சி 3

(தெருவில் சொக்கி வந்து கொண்டிருக்கிறாள். ஒரு பையன் பத்திரிகை விற்றுக்கொண்டு போகிறான்...சொக்கி ஒருபத்திரிகையை வாங்கிக்கொண்டு காசு கொடுக்கிறாள்)

பையன்: அடி சக்கை! ஆளைப் பாத்தா பட்டிக்காடு மாதிரி இருக்கிறே! உனக்குப் படிக்கக்கூடத் தெரியுமா?

சொக்கி: டேய்! முதுகு விறு விறுங்குதா? பட்டிக்காடுன்னு படிக்கத்தெரியாதா? போடா அறையப்போறேன்!

(பையன் ஓடிவிடுகிறான்)

பொடியன்: (வந்து கொண்டே) சொக்கீ! சொக்கி! இன்னைக்கு என்ன பத்திரிகையிலே விசேஷம்?...

சொக்கி: வாய்யா வா! இன்னைக்கு பத்திரிகையிலே பட்ஜெட் வந்திருக்கு!...

பொடியன்: ஆகா! பட்ஜெட்டா? எங்களுடைய முதல் பட்ஜெட்டா?...மன்னிச்சுக்க சொக்கி! நம்மோட முதல் பட்ஜெட்டு! உம்! படி!...படி!...

சொக்கி. (பத்திரிகையைச்சிறிது நேரம் பார்த்துவிட்டு) ஆங்! தி மு க. ஆட்சியிலே அந்த வள்ளுவர் கோட்டம் கட்டினது பூம்புகார் எழுப்பினது, கட்டபொம்மன் கோட்டை கட்டினது — அதெல்லாம் தேவையில்லே — அதுக்குப் பதிலா தொழிற்சாலைகளைத் தனேயோ வச்சிருக்கலாம்னு நம்ம தலைவருங்க பேசினாங்கல்லே, ஞாபகம் இருக்கா?

பொடியன்: ஆமா! ஆமா! அதெல்லாம் என்ன வீண் வேலே?

சொக்கி: இப்ப இவுங்க பட்ஜெட்டிலே, திருமலை நாயக்கன் மகாலையும்...இராமநாதபுரத்திலேஉள்ள இராமலிங்க விலாஸ்மாளிகையையும் தரங்கம்பாடி கோட்டையையும் பாதுகாத்து பொருட்காட்சி வைக்கப் போறாங்க!

பொடியன்: இராமலிங்கவிலாஸ் அதுகட்டபொம்மன் சண்டை போட்ட எடம்! அதை ஞாபகமா பாதுகாக்க வேண்டியதுதான்...

சொக்கி ஏன்யா! கட்டபொம்மன் சண்டை போட்ட இடத்தையே ஞாபகமாப் பாதுகாக்க வேணும்னு அவன் கோட்டை கட்டி கொலுவீற்றிருந்த இடத்தை உழுது போட்டுவிட்டுப் போய்ட்டானே வெள்ளைக்காரன்; அந்த இடத்திலே ஒரு நினைவுக்கோட்டைகட்டியது தப்பா?

பொடியன்: தங்கச்சீ தப்பெல்லாம் அதிலே இல்லே-கோட்டையைக் கட்டினது யாரு? வள்ளுவனுக்குக் கோட்டம் கட்டினது யாரு? தி. மு. க காரனுங்களா இல்லியா? அவனுங்க செஞ்சா அதை நம்ம ஆதரிக்க முடியுமா என்ன?

சொக்கி. ஓகோ, விஷயம் அப்படிப் போகுதோ?

பொடியன்: உம்! அதிலதான் இருக்கு பாயிண்ட்டு! சரிசரி... அப்புறம் பட்ஜெட்டிலே என்ன இருக்கு?

சொக்கி: யோவ்! தம்ப விஷயங்கூட ஒண்ணு இருக்குது

பொடியன்: என்ன சொக்கி, என்ன?

சொக்கி: இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு ஆயத்தீர்வை பதினாலு ரூபாயிலிருந்து பதினேழு ரூபாயாக உயர்த்தப் படும்...

பொடியன். அடி சக்கை! இந்தியாவில் தயாரிக்கப்படுகிற சீமைச்சரக்குக்கு தீர்வையை உயர்த்துனா...அப்புறம் நம்ம நாட்டுச் சரக்குக்கு இன்னம் கொஞ்சம் கிராக்கிதான்! பலே பலே! ஏன், சொக்கி மதுவிலக்குத் திட்டத்தை ரத்துகித்து செஞ்சிடலியே!

சொக்கி: இல்லே! ஏன் அதை அவ்வளவு அக்கறையா கேக்கிறே?

பொடியன்: அந்தத்திட்டத்தை ரத்து பண்ணிட்டா அப்பறம் நம்ப 'பிசினஸ்' என்ன ஆகிறது? 'புனித ராஜ்யம்' லேபிள் வரையிலே போட்டு, பெரிய அளவுலே வியாபாரத்தைத் தொடங்குறதா, நானும் நம்ப அண்ணாச்சியும், உங்க முதலாளியும் பிரமாண்டமான திட்டம் போட்டிருக்கோமே!...

சொக்கி: பட்ஜெட்டிலே இன்னொரு விசேஷம்பார்த்தியா! ஜெயப்பிரகாஷ் நாராயணன் சொன்னாருன்னு தி. மு. க. ஆட்சியிலே லாட்டரி சீட்டு திட்டத்தைக் கைவிட்டாங்கள்ளே; அதை இப்ப மறுபடி இவுங்க அமுல்படுத்தப் போறாங்க!

பொடியன்: அப்படிப் போடு ஒரு போடு! ஜெயப்பிரகாஷுக்கு சரியான அடி!... சொக்கி!...அண்ணாவே உயிரோடு இருந்தாகூட அந்தத் திட்டத்தை இப்ப கைவிட்டிருப்பாரு! நம்பளவரு விடுவாரா? ஜெயப்பிரகாஷ் ஒன்றைச் சொல்லி அதைக் கேட்டு நடக்கிறதாவது!...

சொக்கி: குஜராத்திலே, மது இல்லே! குதிரைப் பந்தயம் இல்லே! லாட்டரி சீட்டு இல்லே! காந்தி பிறந்த மாகாணம் அது! — அது மாதிரி தமிழ்நாடும் இருக்கணும்னு ராஜாஜி நினைச்சார்! ஆனா, மூன்றையும் ஒரே நேரத்திலே செய்ய முடியவில்லே. பயங்கரமான பொருளாதார நெருக்கடியிலே மதுவிலக்கைக் கூட இடையிலே கொஞ்ச நாள் தி மு க. ஆட்சி ஒத்தி வச்சுது. மறுபடியும் நிலைமை சரியானதும் மீண்டும் மதுவிலக்குத் தீவிரமாகக் கொண்டுவரப்பட்டது. தி. மு. க. ஆட்சியிலே! ஆனால் இப்போது ஒழிக்கப்பட்ட பரிசுச் சீட்டை மறுபடியும் கொண்டு வந்திருக்காங்க!



பொடியன்: பரிசுச் சீட்டைப் பத்தி அண்ணா என்னசொல்லி இருக்காரு தெரியுமா?...

சொக்கி: யோவ் சும்மா இரய்யா! அண்ணா மாநில சுயாட்சியைப் பத்தி என்ன சொல்லியிருக்காரு? அதைப் படிக்க மாட்டேங்க. விட்டு விடுவீங்க! அண்ணா நெருக்கடி நிலையைப்பத்தி ராஜ்யசபையிலே என்னபேசியிருக்கிறாரு அதை ஏத்துக்க மாட்டேங்க! பரிசுச்சீட்டைப்பத்தி சொன்னதை மாத்திரம் எடுத்து கிட்டு குதிப்பீங்க!

பொடியன்: ஏ, அப்பா! உனக்கு எவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கு! பொல பொலன்னு புளியங்காய் அடிக்கிற மாதிரி அடிக்கிறியே — நாட்டுக்கட்டை மாதிரி இருந்துகிட்டு ...உலக விஷயம் பூரா பேசறே!... அடி ஆத்தே! சரி! சரி!... அப்பறம் என்ன பட்ஜெட்டிலே விசேஷம்?

சொக்கி தி மு. க ஆட்சிக் காலத்திலே கடலிலே மீனவர்கள் இறந்து போனா — மரமேறிகள் கீழே விழுந்து இறந்துபோனா — பூச்சிமருந்து தெளிக்கும்போது விவசாயிகள் இறந்துபோனா — அவுங்க குடும்பத்துக்கு ஆயிரமோ, இரண்டாயிரமோ நிதி கொடுத்தாங்களே; அதை இப்ப ஐயாயிர ரூபாயா உயர்த்தி இருக்காங்க!

பொடியன்: அதாவது — மீனவர் மரமேறிகள், விவசாயிகள் எல்லோருக்குமா?

சொக்கி: இப்ப விவசாயி படம் ஒண்ணும் புதுசா ரிலீஸ் ஆகலே! அதனால விவசாயிக்கோ, மரமேறிக்கோ அந்த நிவாரண நிதி உயர்வு இல்லே! இப்ப உடனடி ரிலீஸ் மீனவ நண்பன்தான்! அதனால மீனவர்களுக்கு மட்டும் நிவாரண நிதி உயர்த்தப்பட்டிருக்கிறது...

பொடியன்: சொக்கி என்ன? நீ பேசுறது ஒரு மாதிரியா — இண்டலாக்கவ இருக்கு! பட்ஜெட்டிலே இன்னும் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கும். அதைப் படியேன்...பயிர் இன்ஷூரன்ஸ்...

சொக்கி: சே! சே! அது மத்திய சர்க்கார் விவகாரம்னு சொல்லியாச்சு.

பொடியன்: விவசாயிகளுக்குத் தினக் கூலிக்குப் பதிலாக மாதச் சம்பளம்?

சொக்கி: அதெல்லாம் தேர்தல் வாக்குறுதி அதாவது ஏட்டுச் சுரைக்காய்.

பொடியன்: விவசாயத்துக்கும் வீட்டு உபயோகத்துக்கும் மின் கட்டணம் குறைப்பு நிச்சயமா இருக்குமே!

சொக்கி: மூச்!...இரு, தேடிப் பாக்கிறேன் இந்தப் பத்திரிகையிலே போடக்காணோம்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

கலைஞர் கருணாநிதி

புறப்பாட்டுப் பாடும் எம். ஜி. ஆர்.

புறங்காட்டி ஓடாது இருப்பாரா?

கரூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எம். ஜி. ஆர் முழங்கி இருக்கிறார். இந்தியை எதிர்த்துத் தூக்கு மேடை ஏறவும் தயாராக இருப்பதாக. எம். ஜி. ஆர் அப்படி ஒரு பாத்திரத்தில் நடிக்கப் போவதைக் கூறுகிறாரா உண்மையிலேயே இந்தியை எதிர்த்துப் போராடப்போகிறாரா' என்பது தான் எனது கேள்வி. வென்றவன் சொல்வதெல்லாம் வேதமல்லாது வேறில்லை என்று எண்ணிக் கொண்டு எம். ஜி ஆர். பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கென்று ஒரு நீண்ட வரலாறு உண்டு. அது நாற்பதாண்டு வரலாறு. அது பல களங்களைக் கொண்ட போராட்டம். நான் கேட்க விரும்புவதெல்லாம் அந்த நீண்ட போராட்டத்தில் எந்தக் களத்தில் அவர் பங்கேற்றுப்போராடினார்—எந்தக் களத்தில் தலைமை பூண்டார்? என்பது தான்

1938-ம் ஆண்டில் நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்துக்கிளம்பியது. அப்போது சென்னை 'இராசதானி'யின் முதலமைச்சராக இருந்த இராசகோபாலாச்சாரியார் இந்தியைப் பள்ளிகளில் புகுத்தினார். அதை எதிர்த்துத் தந்தை பெரியாரும் அவரோடு இணைந்து தமிழ் அறிஞர்களும் போராடினார்கள். அப்போது ஒரு படைக்கு நமது இதயதெய்வம் அண்ணா அவர்கள் தளபதியாக இருந்தார்கள் அதனாலேயே அறிஞர் அண்ணா அவர்கள் அப்போது 'தளபதி அண்ணா' என்று அழைக்கப்பட்டார்கள். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் 14, 15 வயது பள்ளி மாணவர். கரங்களில் கயல், வில், புலி பொறித்த தமிழ்க் கொடியேந்தி திருவாரூர் வீதிகளில் இந்தியை எதிர்த்து ஊர்வலம் நடத்தினார். அப்போது எம். ஜி ஆருக்கு வயது 28 இருந்திருக்கும் எவ்வளவு குறைத்துச் சொன்னாலும் 25 வயது இருக்கும் சின்னஞ்சிறு மாணவப் பருவத்தில் கலைஞர் இந்தியை எதிர்த்து ஊர்வலம் நடத்தினார். அண்ணா தளபதியாக இருந்து படை நடத்தினார்

தந்தை பெரியார் தலைமை ஏற்றுப் படை நடத்தினார் ஆனால் கட்டிளம் காளைப்பருவத்திலிருந்த எம். ஜி ஆர். அப்போது எங்கே இருந்தார்? என்ன செய்து கொண்டிருந்தார்?

அதற்குப் பின்னர்—தி. மு. கழகம் பிறந்ததற்குப் பின்னர் மீண்டும ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது தாய்க் கழகமாம் திராவிடர் கழகமும் சேய்க் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரே காலகட்டத்தில் ஆனால் தனித்தனியாகப் புகைவண்டி நிலையங்களில் உள்ள இந்திப் பெயர்களைத் தார் கொண்டு அழித்தன அப்போது எம். ஜி. ஆர். எந்தப் புகைவண்டி நிலையத்திற்கு தார்ச் சட்டி ஏந்திச் சென்றார்? எந்த இந்திப் பெயரை அழித்தார்? அந்த வரலாற்று முக்கியம் உள்ள நிகழ்ச்சிகளை எம்.ஜி. ஆர். நாட்டுக்கு அறிவிப்பாரா?

இந்தி எதிர்ப்பின் உச்சக் கட்டம் 1965 பல தமிழ்ச் சிங்கங்கள் இந்தியை எதிர்த்துத் தங்களின் தேக்கு மரதேகங்களை தீக்கு இரையாக்கிக் கொண்டனர்.

மாணவச் சிங்கங்கள் சங்கநாதம் முழக்கிப் போர்ப் பிரகடனம் செய்தார்கள். இந்தி எதிர்ப்புப் புரட்சி வெடித்துக் கிளம்பியது எனது வாழ்க்கையில் இருக்கும் பெருமை எல்லாம் அந்தப் புரட்சியைப் பின்னணியிலிருந்து இயக்கியவன் என்பதுதான். அந்தப் புரட்சியில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

முதன் முறையாகத் தமிழகத்திற்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. இயந்திரத் துப்பாக்கிகள் பயன் படுத்தப்பட்டன. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பிணமலைகள் குவிந்தன. பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்கள் சிறையிலே அடைக்கப்பட்டனர் அந்தப் புரட்சியைக் கலைஞர்தான் தூண்டி விடுகிறார் என்று எண்ணி அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் கலைஞர் அவர்களை இரவோடு இரவாக கைது செய்து சென்னையிலே இருந்து பாளையங்கோட்டைக் காவல்துறை லாரியிலே அனுப்பிவைத்தார். அதுவும் அவர் வயிற்றுவலியால் துடித்துக் கொண்டிருந்தபோது அழைத்துச் சென்று தனிமைச் சிறையிலே அடைத்து வைத்திருந்தார்கள். அப்போது எம். ஜி. ஆர். எங்கே போயிருந்தார்? என்ன செய்து கொண்டிருந்தார்? தமிழகத்தில் இருந்தால் எங்கே ஆட்சியாளர்கள் தன்னையும் கைது செய்து விடுவார்களோ என்று அஞ்சி கோவாவிற்கு ஓடிச் சென்றார். கோவாவிலே இருந்து கொண்டு— செத்து மடிந்து கொண்டிருந்த தமிழர்களுக்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாரா? இல்லை இல்லை. உல்லாசமாக சரசசல்லாபக் காட்சிகளில் நடித்துக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட எம். ஜி. ஆர். தான் இப்படி இப்போது திடீர் என்று புறப்பாட்டுப் பாடுகிறார்

புறப்பாட்டுப் பாடும் எம். ஜி. ஆர். புறங்காட்டி ஓடாது இருப்பாரா என்பதே நமது கேள்வி.

“நான் இந்தியை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்துகிறேனே. தென்னக முதலமைச்சர்களைக் கூட்டி கூட்டுத் தீர்மானம் போடுகிறேனே கலைஞர் என்னைப் பாராட்ட வேண்டாமா?” என்று எம்.ஜி. ஆர். அந்த கூட்டத்தில் கேட்டுள்ளார். இந்தியை எதிர்ப்பவர் யாராக இருந்தாலும் அவரை வரவேற்க அவருக்கு இந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஒத்துழைப்பு நல்க தி. மு. கழகம் கடமைப்பட்டிருக்கிறது.

எனக்கு ஒரு நிகழ்ச்சி பசுமையாக நினைவில் இருக்கிறது. 1954 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரித்தமிழ் இலக்கியப் பேரவையின் சார்பில் சென்னையில் செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் ஆட்சிமொழிக் கருத்தரங்கு நடந்தது அப்போது நான் சட்டக்கல்லூரித் தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவராக இருந்தேன். நண்பர் மைக்கேல் ராசு செயலாளர். நண்பர் அ. அ. ஜின்னா துணைச் செயலாளர். அக்கருத்தரங்கில் எதிர் எதிர்த்துருவங்களாக இருந்த அண்ணா அவர்களும் இராஜாஜி அவர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு முன்னர் பேசிய நான் ஒருகருத்தினை தெளிவாக எடுத்துக் காட்டினேன் ஆம் தி மு கழகத்தின் இந்தி எதிர்ப்பிற்கும் ராஜாஜி அவர்களின் இந்தி எதிர்ப்பிற்கும் உள்ள அடிப்படையான — ஆனால் மிக நுட்பமான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினேன். கழகம் இந்தியை எந்த உருவிலும் ஆட்சி மொழி உருவிலானாலும் பாடமொழி உருவிலானாலும் எதிர்க்கிறது இந்தி இப்போதானாலும் வேறு எப்போதானாலும் கூடாது என்று கூறுகிறது. ஆனால் இராஜாஜி அவர்களோ இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்கிறார். ஆனால் அதே நேரத்தில் அதனைப் பள்ளிகளிலே பாடமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்கிறார். இதனை எடுத்துக் காட்டிப் பேசிய நான் மிகவும் ஆவேசமாக “இராஜாஜி அவர்களே நீங்கள் இந்தியை எங்களைப் போல் முழுமையாக எதிர்க்கவில்லை; உரிமைக்காகப் போராடவில்லை, மாறாக காலத்திற்காகக் கெஞ்சுகிறீர்கள். ஒரு 10, 15 ஆண்டுக் காலம் அவகாசம் கொடுங்கள், நாங்கள் இந்தியைப் படித்து விடுகிறோம். அதற்குப் பிறகு நீங்கள் இந்தியை ஆட்சி மொழியாக்குங்கள்; எனக்கு ஆட்சேபனை இல்லை என்கிறீர்கள்’ என்று கூறினேன். என்னை அடுத்துப் பேசிய அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்பு அணியின் வேறுபாட்டைப் பெரிதுபடுத்தக் கூடாது; ஒற்றுமையைப் பெரிதாக்கிக்காட்ட வேண்டும் அப்போதுதான் இந்தி எதிர்ப்பில் நாம் வெற்றி பெற முடியும் என்று அறிவுரை கூறினார். அந்த அறிவுரையை நாங்கள் இன்றைக்கும் மறக்காது மதித்து நடக்கிறோம்.

இந்தியை யார் எதிர்த்தாலும் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம். அவர்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் ஆனால் எனக்கிருக்கும் சந்தேகம் எல்லாம ஒன்றே ஒன்றுதான். எம் ஜி ஆர் உண்மையிலே இந்தியை எதிர்க்கிறாரா? அல்லது எதிர்ப்பதைப் போல் நடிக்கிறாரா? அவருடைய கடந்தகால வரலாறு அவருக்கும் இந்தி எதிர்ப்பிற்கும் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை என்பதைக் காட்டுகிறது.

அவ்வளவு ஏன்? மிக அண்மையில் எம். ஜி. ஆர். என்ன பேசியுள்ளார்? இந்தியும் தமிழும் சகோதர மொழிகள் என்றல்லவா கூறியுள்ளார்.

இந்தியும் தமிழும் சகோதர மொழிகள் என்னும் கருத்தை எங்கே இருந்து கண்டு பிடித்தார் எம் ஜி ஆர்.? கால்டுவெல் கூறியுள்ளாரா? தேவநேயப்பாவாணர் கூறியுள்ளாரா? எந்த மொழியியல் அறிஞர் அந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்? எம். ஜி. ஆர், அருள்கூர்ந்து தெளிவு படுத்துவாரா? இந்தியாவில் உள்ள மொழிகள் இரண்டு மொழிக் குழுவைச் சேர்ந்தவை. தமிழ். தெலுங்கு. மலையாளம் கன்னடம் துளுவம், ஆகிய தென்னக மொழிகள் திராவிட மொழிக் குழுவையும், இந்தி இந்துஸ்தானி உருது. குஜராத்தி மராட்டி போன்ற வடநாட்டு மொழிகள் சமஸ்கிருத மொழிக் குழுவையும் சேர்ந்தவை தமிழுக்கு மலையாளம் வேண்டுமானால் தெலுங்கு வேண்டுமானால் கன்னடம் வேண்டுமானால் சகோதரி மொழியாக இருக்க முடியுமே தவிர இந்தி எப்படி தமிழின் சகோதரி மொழியாக இருக்க முடியும்? இந்தியை எதிர்த்துத் தூக்குக் கயிற்றையும் முத்தமிடத் தயார் என்று முழங்கும் எம் ஜி. ஆர். அப்படியேன் இந்தியிடம் குழைய வேண்டும்? ஒருபுறம் கொஞ்சுகிறார். மறுபுறம் கொதிக்கிறார். மற்றோர்புறம் குழைகிறார். இவர் இந்தியை எதிர்க்கிறார் என்று எப்படி நாம் நம்புவது?

இன்னொன்றையும் நான்

(12-ம் பக்கம் பார்க்க)

கல்லறைப் பிணம் எழுந்து வந்ததா?

பம்பாயிலிருக்கும் அரசாங்க மருத்துவ விடுதி ஒன்றில், மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான வகுப்பொன்று நடந்தது. அன்றைய பாடம் — பிணங்களை அறுத்துப் பார்ப்பது'

ஒரு மாணவன் நீண்ட மேஜை அருகே சென்றான். மேஜையில் கிடத்தப்பட்டிருந்த பிணத்தின்மீது போர்த்தப்பட்டிருந்த துணியை விலக்கினான்—

விலக்கியவன், அதிர்ச்சி அடைந்தவனாக 'ஓ'வென அலறிவிட்டான்.

காரணம்—

அந்தப் பிணம் அவனுடைய மாமனுடையது. முந்தின நாள்தான் மாண்டு போனார் அவர். கல்லறையிலிருந்த அவர் பிணத்தை எவனோ களவாடி வந்து மருத்துவ விடுதியில் விற்றுவிட்டானாம்!

குல்திப்நய்யாரின் வெளியேற்றம்

இந்திராவைக் கடுமையகாத் தாக்கி, நெருக்கடி நிலையை எதிர்த்துப் போரிட்ட நாள் இதழ்களில் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' முக்கியமான ஒன்று,

அதில் தொடர்ந்து 'சூடு' பறக்கும் கட்டுரைகள் எழுதிவந்த 'ஜட்ஜ்மண்ட்' புகழ் குல்திப் நய்யாரும், அஜித்பட்டாச்சார்ஜியும் இப்போது 'இந்தியன் எக்ஸ்பிரசை விட்டு வெளியேறி விட்டார்கள். காரணம்—

ஜனதா நெருக்கடி குறித்தும், உட்பூசல்கள் பற்றியும் அவ்விருவரும் கடுமையாக விமர்சனம் செய்து எழுதுவது 'இந்தியன் எக்ஸ்பிரஸ் உட்பட பல பத்திரிகைகளின் 'முதலாளி'யான கோயங்காவுக்குப் பிடிக்கவில்லையாம்.

கோயங்கா மொரார்ஜிதேசாயின் ஆதரவாளர்.

கழுதையும் அறியுமே

அரசியலில் நிரந்தரமான நண்பர்களும் இல்லை, நிரந்தரமான பகைவர்களும் இல்லை நேற்றைய கூட்டாளிகள் இன்றைய எதிரிகள் இன்றைய எதிரிகள் நாளைய கூட்டாளிகள் நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும்ஏற்பக்கூட்டாணிகள் மாறுகின்றன.

சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது இந்திரா காங்கிரசும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் எம். ஜி ஆரின் கூட்டணிக் கட்சிகள். அப்போதெல்லாம் அவசர நிலை அமுலில் இருந்தது மிசாவும் இருந்தது இந்திரா காந்தியே ஆட்சியிலும் இருந்தார். அப்போது முகிழ்த்த முற்போக்குக் கூட்டணிக்கு இங்கே ஓடி ஓடி உழைத்தவர்தாம் எம ஜி. ஆர்.

அவசர நிலைக் கொடுமைகளுக்கும் மிசாவுக்கும் ஆளாகி 'ஜனநாயகக்' கூட்டணி அமைத்தவர்கள் ஜனதா — மார்க்சிஸ்ட் தி. மு க. தோழர்கள்

சுருங்கச் சொன்னால் நெருக்கடி நிலையை 'முழுமையாக ஆதரித்து, செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்தபோதும் உதைத்த காலுக்கு முத்தமிட்டுப்புரட்சிப்பயணம் நடத்திப் புதிய புறநானூறு படைத்தவர்கள் எல்லாம் ஓர் அணி அதை எதிர்த்து ஜனநாயகத்தைக் காக்கும் கடுமையான போரில் ஈடுபட்டோரெல்லாம் மற்றோர் அணி

இறுதியில், தடைகளை உடைத்தெறிந்து 'தர்மமே வெற்றி பெற்றது; அந்தத் தியாக வேள்விக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னையே காவு கொடுத்தது தன்னைத் தேய்த்துக் கொண்டு மற்றவர்களுக்கு மணம் பரப்பும் சந்தனக் கட்டையாகத் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் பயன்பட்டார்! அதன் விளைவு?

மசா மூட்டத்தில் மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தவர்கள் — அவசர நிலைக்குப் பயந்து 'அகில இந்திய' ஆனவர்கள் — மீண்டும் தேர்தல் களத்திலே மிடுக்கோடு இறங்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

மற்றவர்க்கு மணம் பரப்பி 'தேய்ந்து நின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை மார்க்சிஸ்ட் தோழர்களும் ஜனதா கனவான்களும் கைவிட்டார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருந்து அகற்றப்பட்டவுடன் அவசர நிலையினையும் அகற்றிவிட்ட இந்திரா காங்கிரசையும், தொடக்க காலம் முதல் தோழமை பூண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் தனது முற்போக்குக் கூட்டணியிலிருந்து அகற்றிவிட்டார் எம். ஜி. ஆர்.

மீண்டும் வேறொரு கூட்டணி முளைத்தது! இம்முறை எம். ஜி ஆரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளும் 'ரத்தத்தின் ரத்தம்' ஆயினர்!

கேரளத்தில் நெருக்கடி நிலைக் கொடுமைகளுக்குப் பலியான புரட்சி இளைஞன் ராஜனுக்காக இங்கே நீலிக் கண்ணீர் வடிக்கும் மார்க்சிஸ்ட் தோழர்கள் அதே நெருக்கடிநிலை இப்போதும் வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறும் தங்கத் தலைவர் எம். ஜி. ஆரிடம் சங்கமம் ஆயினர்.

ஜனதா உறவுக்கு மார்க்சிஸ்டுகளே பாலம் அமைத்தனர். மாநிலங்களவைத் தேர்தலில் மார்க்சிஸ்ட் — ஜனதா உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து வெற்றிவாகை சூடினர். தற்போது மதுரை மாநகராட்சித் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் இணைத்துக் கொண்டனர், ஜனதா கனவான்களைத் திருப்திப்படுத்த இந்திரா காங்கிரசைத் தெருவில் விட்டனர் இதுதான் தமிழகத்தில் அரசியல் கூட்டணிகள் அண்மைக் காலத்தில் கருவாகி உருவாகி கரைந்துவிட்ட வரலாறு'

அரசியல் அரங்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனிமைப்படுத்தி அதன் தலைவர்களைப் பழிவாங்கும் நீதிபதி யார் என்ற விவரம் மாத்திரம் அறிவிக்கப்படும் என்றும், இந்த முடிவு தொலைபேசிமூலம் முதலமைச்சரைக் கலந்து கொண்டே எடுக்கப்பட்டதாகவும் மாண்புமிகு நிதியமைச்சர் மனோகரன் அறிவித்தார்; அதனைத் தலைமைச் செயலாளர் திரு கார்த்திகேயனும் உறுதிப்படுத்தினார்.

ஆனால், கும்பகோணத்திலிருந்த எம். ஜி ஆர். சென்னைக்கு வந்ததும் நிலைமைகள் தலைகீழாக மாறின; அறிவிக்கப்பட்ட அரசாங்க முடிவுகள் எம். ஜி. ஆரின் தேர்தல் கால வாக்குறுதி போல் தேய்ந்து மறைந்தன. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல், "நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் நீதி விசாரணை என்ற நிலை மாறி, சென்னையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை நியாயப்படுத்தும்

தலைவர்கள் பலரும் எம். ஜி. ஆருக்குப் புத்திமதி கூறக் கூடிய புதிய சூழ்நிலையும் உருவாயிற்று இந்தப் பின்னணியில் டில்லிக்குச் செல்ல நேரிட்ட எம். ஜி ஆர். அங்கு இந்திராவைச் சந்திக்கவே இல்லை நிருபர்கள் கேட்டபோது கூட 'இந்திராவைச் சந்திக்கப் போவதில்லை'' என்று கூறி விட்டார். மத்திய அமைச்சர்களிடம் சில விவகாரங்களில் மாட்டிக்கொண்ட எம். ஜி ஆர்., அவர்களுடைய ஆத்திரத்துக்கு ஆளாகக் கூடாது. என்பதற்காகவே அங்கு இந்திராவைச் சந்திக்கவில்லை அதன் பின்னர் இன்று வரை சந்திக்கவே இல்லை. ஆனாலும் மனோகரனைத் தூது அனுப்பி மன்னிப்புக் கேட்கவும் தவறவில்லை.

தன்னைப் போல் மற்றவர்களையும் கருதி வம்புக்கு இழுக்கிறார்.

கற்பூர வாசனை!

நயவஞ்சகப்பணியில் மூழ்ந்து நிற்கிறார் முதலமைச்சர் எம் ஜி. ஆர். இதற்காக ஜனநாயக நெறிமுறைகள் — நியாயங்கள் அனைத்தையும் புதைகுழிக்கு அனுப்பவும் தயங்கவில்லை'

நெருக்கடிநிலைப் பிரகடனத்தையும் அதன் பின்னணியில் நடைபெற்ற எண்ணரிய கொடுமைகளையும் நியாயப்படுத்தி வந்த இந்திராகாந்திக்குக் 'கறுப்புக் கொடி காட்ட தி க. தி மு க மார்க்சிஸ்ட் முதலானகட்சிகள் எடுத்த முடிவு ஜனநாயக நெறிமுறைக்கு உட்பட்டதுதான் என ஒப்புக் கொண்டு அதற்கு அனுமதியும் வழங்குவதாகக் கூறிய எம் ஜி ஆர்., தான் யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத பொய் வழக்குகளைக் கழகத் தலைவர்கள்மீது மாத்திரம் போட்டார். அதுவும் அவரே முதலமைச்சர் என்ற முறையில் நேரடியாகத் தலையிட்டுப் போடச் செய்தார். கறுப்புக் கொடி நிகழ்ச்சியில் பங்கேற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் திராவிடர்க் கழகத தோழர்களையெல்லாம் விட்டுவிட்டு கழகத் தலைவர்களைத் தனிமைப்படுத்தி கடுமையான பிரிவுகளின்கீழ் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசியல் ரீதியாக நேருக்கு நேர் சந்திக்க முடியாத எம். ஜி. ஆர் இந்திரா காங்கிரசுக்குப் பரிந்து பேசுவதாக 'பாவனை' செய்து பழிவாங்கும் படலத்தைத் தொடர்தார்.

கறுப்புக் கொடி நிகழ்ச்சியையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச்சூடு, வன்முறைச் சம்பவங்கள் முதலான அனைத்துக்கும் ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட நீதி விசாரணை நடத்தத் தமிழக அரசு முடிவு செய்துவிட்டதாகவும், டெல்லிக்குச் சென்றிருந்த தலைமை நீதிபதி திரு கோவிந்தன் நாயர் சென்னை திரும்பியவுடன்,

மூகையில் ஓய்வு பெற்ற நீதிபதி சோமசுந்தரம் தலைமையில்பெயரளவுக்கு ஒரு நீதி விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது! துப்பாக்கிச்சூடு எங்கே நடந்தாலும் போலீசார் நடவடிக்கை நியாயந்தானா என்பதைக் கண்டறிவதற்கு நியமிக்கப்படும் அதிகாரி

க. சுப்பு
எம். எல். ஏ.

களின் விசாரணைக்கு ஒரு மாற்று ஏற்பாடாகவே அமைந்தது அந்த விசாரணையையும் சீர்குலைக்கும் முறையில் பல்வேறு அறிக்கைகளும் தலையீடுகளும் வந்த வண்ணம் இருந்தன.

கழகத்தின் நோக்கம் கொள்கை அடிப்படையில் இந்திராவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவது, எம் ஜி. ஆரின் திட்டமோ அதில் கழகத் தலைவர்களைச்சிக்க வைத்து கொடிய வழக்குகளைப் போடுவது; பழி தீர்த்துக்கொள்வது. எம். ஜி. ஆர். விரித்த சூழ்ச்சி வலையில் ஜனநாயகப் பறவைகள் சிக்கிச் சிறகொடித்து நிற்பதாக அவருக்கு ஆனந்தக் களிப்பு. ஆனால் அவருடன் கூட்டுச் சேர்ந்த மார்க்சிஸ்ட் தலைவர் ராமமூர்த்தியிடமிருந்து கூட எம். ஜி ஆரின் இந்த நடவடிக்கை 'புத்திசாலித்தனமானது அல்ல' என்ற கணிப்பு வெளிப்பட்டது

கழகத் தலைவர்கள் மீது பொய் வழக்குப் போட்ட எம். ஜி ஆருக்கு எதிராக நாடெங்கும் கண்டனக் குரல் எழுந்தது ஜனநாயகத்தை மதித்து நீதிக்குத் தலைவணங்குகிற நியாய உள்ளம் படைத்த பலரும் கண்டனம் தெரிவிக்கத் தவறவில்லை. லண்டன், குவைத் இலங்கை போன்ற இடங்களில் உள்ள இந்தியத் தூதரகங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்; விடுதலை கோரி விண்ணப்பம்! மத்தியிலுள்ள

"கருணாநிதி தொண்டர்களை ஏமாற்றுகிறார், இங்கே இந்திராவுக்குக் கருப்புக் கொடி காட்டிவிட்டு டில்லிக்குத் தூது அனுப்பி மன்னிப்புக் கேட்கிறார்' என்று மதுரையிலே திருவாய் மலர்ந்திருக்கிறார்! அதற்குக் கலைஞர் கொடுத்த பதிலடி எம். ஜி ஆரை எழுந்து நிற்கவும் வலிமையற்றவராக ஆக்கியிருக்கிறது. நம்மை 'பார்த்து ஏளனம் பேசும் எம் ஜி ஆர். இந்திராவின் ஒரே கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. ஆம் அவர் ஒரு மர்ம மனிதர்.

'ஜனதா அரசின் தவறான கொள்கைகளை எதிர்த்துப் பேசும் துணிச்சல் எம். ஜி. ஆருக்கு உண்டா? என்பதுதான் அந்தக் கேள்வி இதற்கு எம் ஜி ஆரிடமிருந்து பதில் ஏதும் இன்று வரை வரவில்லை. பாராளுமன்றத்தில் ஜனதா அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தபோது, காங்கிரஸ் கட்சிகளுடனும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் சேர்ந்து எம ஜி ஆர்.

கட்சிக்காரர்களும் பேசினார்கள். உடனே பிரதமர் மொரார்ஜி தேசாய் எம். ஜி. ஆரை டில்லிக்கு வரச்சொல்லி விளக்கம் கேட்டார். ஜனதா அரசை முழுமையாக ஆதரிப்பதாக உறுதியளித்து விட்டு சென்னைக்கு ஓடோடி வந்தார். இதற்கு இடையே ஒளித்துகொண்டிருக்கும் மர்மம்தான் என்ன? எம். ஜி. ஆர். விளக்குவாரா!

அந்த 'மர்மத்தை' வெளியிட்டால் அதுவே இந்திராவின் கேள்விக்கு உரிய பதிலாக அமையும்! வெளியிடுவாரா எம். ஜி. ஆர்? மூடி மறைத்தாலும் உண்மை ஒரு நாள் வெளியாகாதா? அன்று உண்மைகள் எல்லாம் தெளிவாகாதா?

வேறு வேலையாக டில்லிக்குச் சென்றிருந்தபோது மரியாதையின் நிமித்தம் நான் இந்திராவைச் சந்தித்துப்பேசியதை 'பெரிய கண்டுபிடிப்பாகக் கொண்டு கதையளக்கிறார்கள். கலைஞர் என்னைத் தூது அனுப்பியதாகவும், மன்னிப்புக் கேட்டதாகவும் கூறி, அரசியல் ஆதாயம் தேட முனைகிறார்கள் 'இந்திரா காந்தி அவர்களிடம் மதுரையில் நடைபெற்ற விரும்பத்தகாத — துரதிருஷ்டவசமான வன்முறைச் சம்பவங்களுக்குக்கழகத் தலைவர் கலைஞர் அன்றே வருத்தம் தெரிவித்திருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டி இந்திரா காந்தியிடம் நான் கூறியதை 'மன்னிப்பு' என்று போட்டுச் சிலர் மனநிறைவு கொள்கிறார்கள்!

எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவிக்கும் பெருந் தன்மையினை எம். ஜி. ஆரிடம் எதிர்பார்க்க முடியாது! அதற்குக் காரணம் அவர் ஓர் அரசியல் வாதியல்ல. இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். கழகத் தலைவர் கலைஞரைப்பொறுத்த வரை இந்திராவின் முற்போக்குக் கொள்கைகளுக்கு உற்ற துணைவனாக நின்று 'உடுக்கை இழந்தவன் கைபோல' உதவிக்குச் சென்றவர்; அரசியலில் இந்திராவையும், அவருடைய முற்போக்கு அரசியலையும் நிலை நிறுத்த அரும்பாடு பட்டவர்;

"நகுதற்பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" என்ற தமிழ் மறையின் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாகத் திகழ்பவர்.

இதையெல்லாம் எம். ஜி. ஆர் அறிவாரா? அப்படியானல், இனிமேல் "கழுதையும் அறியுமே கற்பூர வாசனை

ஃ

ஒய்வுக்குப்பின் உயர்வு!

கணேஷ் கௌண்ட் என்பவர் அசாம் அரசு விவசாய துறையில் பணியாற்றி வந்தவர்; பதினொரு ஆண்டுகளுக்கு அதாவது 1876 ம் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார் ஆனால் சமீபத்தில் அவருக்கு அரசுவிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது அவருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

அதுமட்டுமின்றி அவருடன் பணியாற்றிவந்த ஒருவர் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அசாம் அரசுவிடமிருந்து அவருக்கும் ஒரு கடிதம் வந்துள்ளதாம் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதாக.

நல்லவேளையாக அவர்களுடைய மறைவிற்குப்பின் இந்த பதவி உயர்வு அறிவிப்புகள் வராமல் போய்விட்டதே என்று இந்தச் செய்தியை படித்த அலுவலகத் தோழன் கூறினன்.

விழிகள் விரிந்திருக்கட்டும்!
செவிகள் குவிந்திருக்கட்டும்!

பேரறிஞர் ராஜாஜி-பெருந்தலைவர் காமராசர்-இதய தெய்வம் அண்ணா-இன்ன பிறர் இருந்து சிறப்பித்த இருக்கையில் இன்றைய தினம் எம். ஜி. ராமச்சந்திரன் இருந்து கொண்டு புத்தர் வேடம் போடுகிறார்! புனிதனாகத் தன்னைப் புவிக்குக் காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறார். அதன் விளைவு. நாடகத்துப் பத்தினி நடிகர் இராமச்சந்திரன் விசிறிகளும் மேலாளர்களும் 'அமைச்சர்'கள் என்ற போர்வையில் இன்றைய தினம் ஏதேதோ பேசி வருகிறார்கள்.

அண்மையில் தஞ்சைக்கு வந்த அமைச்சர் ஒருவர் நிருபர்களைச் சந்திக்கிறார்.

'பூம்புகாரில் புதிய கட்டிடங்கள் கட்டப்படுமா?'— கேட்கிறார்கள்.

'கட்டப்படமாட்டாது.'— வெட்டொன்று துண்டிரண்டெனவிளம்புகிறார் அமைச்சர்!

'இலஞ்சி மன்றமாவது எழுப்பப்படுமா?' இரண்டாவது கேள்வி எழுகிறது.

'அதுவும் எழாது!' அமைச்சரின் பதில்.

மதுரை-உறையூர்-முசிறி-தொண்டி-கொற்கை-பூம்புகார் இவைகளெல்லாம் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கவேண்டிய பெயர்களாகும்.

'மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெலென்று
யானைகட்டிப் போரடிக்கும்
வளமான தென்மதுரை.'

என்பார்கள்

'ஊரெனப்படுவது உறையூர்' என்பார்கள்.

'பொதியிலாயினும்
இமயமாயினும்
பதியெழு வறியாப்
பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்'

என்பார்கள் ஆயினும் அந்த நகரங்களில் பல இன்று அழிந்துபோயின

பண்டை நலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய் இந்நாள்
தொண்டு செய்வாய்
தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெழுந்தே

என்றபடி துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து 'கலைஞர்' தொண்டு செய்ய முன் வந்ததன் விளைவுகளில் ஒன்றுதான் புதிய பூம்புகார் நகரமாகும்!

இருந்த இடம் தெரியாதிருந்த நிலைபோய்ப் புதிய பூம்புகார் பொலிவுடன் காட்சி தருகிறது. நகரத்தின் பெயர் மட்டும் பூம்புகாரல்ல! அந்தத் தொகுதியின் பெயரும் பூம்புகாராகும்' நாளை தஞ்சை மாவட்டம். கீழ்த்தஞ்சை. மேலத்தஞ்சையென இரண்டாகப் பிரிக்கப்படுமேயானல். கீழத்தஞ்சைக்குப் 'பூம்புகார்' எனப் பெயர் சூட்டினாலும் சூட்டலாம்! இதற்கெல்லாம் காரணம் யார்? எண்ணிப் பார்க்கிறார்கள். புகார் நிலைத்தால் நாம் தந்த 'புகார்' நிலைக்காது; மாறாக, கருணாநிதியின் 'புகழ்'தான் நிலைத்திடும் என எண்ணி வேதனைப் பெருமூச்சு விடுகிறார்கள். வேறு விதத்தில் (பத்திரிகை நிருபர்களுக்குப் பதிலாக) அது வெளிப்படுவதைக் காணுகிறோம்.

கோ. இளங்கோவன்
பி.ஏ., பி.டி. எம்.எல்.ஏ.

அன்றைய பூம்புகாரில் ஐவகை மன்றங்கள் இடம் பெற்றிருந்தன.

அவை,

1. வெள்ளிடை மன்றம்,
2. இலஞ்சி மன்றம்,
3. நெடுங்கால் மன்றம்.
4. பூத சதுக்கம்,
5. பாவை மன்றம் ஆகும்.

கலைஞர் காலத்தில் அவை அனைத்துமே இடம் பெறவில்லையாயினும் 'இலஞ்சி மன்றம்' போன்ற இரண்டொரு மன்றங்கள் இடம் பெற்றன.

எழில்மிகு இலஞ்சி மன்றம் எழுப்பப்பட்டது பத்திரிகை நிருபருக்குத் தெரியாமற் போயிருந்தாலும் அமைச்சருக்கு அது தெரிந்திருக்க வேண்டும் அமைச்சருக்கு அது தெரியாதிருக்குமேயானால் அது அவரது அறியாமை' அவரது அறியாமையை அவர் வெளிக்காட்டத் தேவையில்லை' அது மட்டுமல்ல' சற்றுமேலே சென்று 'இலஞ்சி மன்றத்தில் குற்றவாளிகளை அந்தக் காலத்தில் கொண்டு வந்து விசாரணை செய்ததாக கேள்வி.' என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

'இலஞ்சி என்றால் குளமென்று பொருள் 'குளத்தொடு கூடிய மன்றம் இலஞ்சி மன்றமாகும் ஆட (நீராட) வருகின்ற மகளிர் ஆடைகளைக் களையவும் உடுத்தவும் பயன்படுகின்ற மண்டபம் அதுவாகும். இலஞ்சி மன்றம் பற்றி இயம்பவந்த இளங்கோவடிகள்,

'கூனும் குறளும் ஊமும்
செவிடும்
அழுகுமெய் யாளரும்
முழுகினராடிப்
பழுதில் காட்சி நன்னிறம்
பெற்று
வலஞ்செயாக் கழியும்
இலஞ்சி மன்றம்'

என இயம்புகிறார்.

'கூனன் நிமிர்வானா?
குறளன் வளர்வானா?
ஊமை பேசுமா?' என்றெல்லாம் கேட்கக்கூடும் அன்றைய தினம் அத்தகு ஆற்றல்கள் இலஞ்சி மன்றத்திற்கு இருந்ததா? இல்லையா?-என்பதல்ல பிரச்சினை. சமுதாயத்தில் கூனும் குறளும் ஊமும் செவிடும் அழுகுமெய்யாளரும் அறவே இருக்கக்கூடாதென எண்ணந்தலைப்பட்டனர் இளங்கோவடிகள் காலத் தமிழரெனத் தெரிகிறது அந்த எண்ணம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து இலஞ்சி மன்றம் எழுப்ப முன்வந்த கருணாநிதிச் சோழனுக்கும் ஏற்பட்டதன் விளைவுதான்—

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் — கண்ணொளி வழங்கு திட்டம்—உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வளிக்கும் திட்டம் — போன்றவையாகும்.

இவற்றையெல்லாம் உணர முடியாதவர்கள் - உணரமறுப்பவர்கள் - உண்மைகளை உலகத்தோரிடமிருந்து மறைக்க வேண்டி உளறத் தலைப்படுகிறார்கள். உளறுவாயர்களே! உங்களது 'விழிகள் விரிந்திருக்கட்டும்! செவிகள் குவிந்திருக்கட்டும்!"

★

நடிக முதல்வருக்கு நாவடக்கம் தேவை

'அவதார' மனிதர் அழைப்பு விடுகிறார்! கதவுகளைத் திறந்தே வைத்திருக்கின்றாராம், கைகளை நீட்டிக் கொண்டே நிற்கின்றாராம். வருபவர்களை வரவேற்றிட வழிமேல் விழிவைத்து வாயிற்படியிலேயே காத்திருக்கின்றாராம்!

அழைப்பு விடுக்காமலேயே அணைத்துக்கொள்ள ஓடிவரும் குளிர்ந்த 'முகம்' கொண்டவர்களைக் கண்டு கண்டு, நடிக முதல்வர் எல்லோருமே ஓடிவருவதாகக் கனவு காண்கிறார்.

'எங்கே ஓடலாம்' என்று எப்போதும் நினைப்பவர்களும் 'எவரை இழுக்கலாம்' என்று கற்பனையில் மிதப்பவர்களும் அசையாத இமயமலையைக் கூட ஓடுவதாக நினைப்பவர்கள்; ஒதுங்க வருவாய் என்று அழைப்பார்கள்.

'அவனவன் புத்தி அவனவனுக்கு' என்று பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள்.

சொத்தைப் பாதுகாக்கும் சுயநல உணர்வுக்காகவே அரசியலை உண்டாக்கி, அண்டியிருந்த இடத்தையும், ஆதரவு தந்தவர்களையும் காட்டிக் கொடுத்துக் களித்து வாழும் நடிகர்க்கு எல்லாருமே அவராகப்படுகிறார்கள்.

ஆம்!

அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, ஆசை அவரின் கண்களுக்குத் திரையாக வளர்ந்துவிட்டது.

ஆம்!

நெஞ்சில் நிரம்பி வழியும் ஆணவக் கொழுப்பு வாய் வழியாக வழியத் தொடங்கி விட்டது.

கதவுகளைத் திறந்தே வைத்திருக்கிறாராம்; கழகத் தோழர்கள் வரவேண்டுமாம்

தஞ்சாவூர்க் கிச்சடிச் சம்பாச்சோறு தாம்பாளம் நிறையக் கிடைக்கும்போது, பவுடரைச் சோறாக்கித் தருகிறேன் என்றால் பைத்தியக்காரன் தான் போவான்.

கொள்கைத்தங்கம் கோபுரம்போல் எதிரே இருக்க, குப்பைமேட்டை நாடிக் குருடன்தான் போவான்.

வாழ்ந்துவரும் குகையை வரிப்புலிகள் மாற்றிக்கொள்வதில்லை என்பதைக் கிளைக்குக் கிளை தாவும் மந்தி மனங் கொண்டவர்களுக்குத் தி.மு. கழகத் தோழன் தெளிவாகத் தெரிவித்துக்கொண்டபிறகும் 'ஆடவருவாயா கண்ணா!' என்று நடிகர் அழைப்பு விடுகிறார்.

தென்னகன்

கொள்கை, கொடி, கழகம் என்னும் மூன்றினையும் தன் மூச்சாகக் கொண்டுள்ள தி.மு. கழகத் தோழன் அச்சமூட்டலுக்கோ, ஆசை வார்த்தைகளுக்கோ அஞ்சிச் சேரக்கூடாத இடத்தில் சேரமாட்டான் என்பதை 'மாதா'விடம் நேற்று மண்டியிட்டு, 'பிதா'விடம் இன்று பிரேமை காட்டும் பெரியவர் இன்னும்புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்.

கொண்டவனிடத்துக் கோபம் கொண்டு, ஒழுக்கமில்லாத குட்டரோகியிடம் எந்தக் குலமகளும் தஞ்சம்புக மாட்டாள் என்பதைத் தகுதியான இடத்தில் எப்படியோ உட்கார்ந்துவிட்டவர் உணராமல் இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் பாவங்களுக்காகமனம் வருந்த வேண்டுமாம் தி. மு. கழகத்தாரை

உலகப் பாவங்களையெல்லாம் உருவாகக் கொண்ட 'திரைப்பட உத்தமர்' சொல்லுகிறார் இப்படி.

தி மு கழகம் எப்படிப் பாவத்தைச் செய்ய முடியும் என்பதைப் பாதி முதல்வர் தான் சொல்ல வேண்டும்.

அவரை வளர்த்துவிட்ட பாவத்தைத்தவிரவேறெந்தப் பாவத்தையும் செய்தறியாதது தி. மு. கழகம்.

அழிக்க முடியாத அந்தப் பாவத்தையே கழுவிவிட்ட தி. மு. கழகம் அதன் பிறகு

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

ஜனதாவின் துரோகம்

ஆட்சி பீடத்தில் அமர்ந்துவிட்டதால் ஜனதாக் கட்சித் தலைவர்கள் என்னை அடியோடு மறந்துவிட்டார்கள்.

-ஆச்சார்ய கிருபளானி

புருஷன்

தென்னரசு

(10)

அடுத்த மாதம் அணைக்கட்டு வேலைகள் பூர்த்தியாகிவிடுமென்று அறிவிக்கப்பட்டு விட்டது. முதன் முதலாக அணையைத்திறப்பதற்கு பட்டணத்திலிருந்து பெரிய தலைவர் வரப்போவதாக ஒருமாதத்திற்கு முன்பே பேச்சு அடிபடத் தொடங்கியது.

அணைக்கட்டுத் தொழிலாளர்கள் கடைசி கடைசி என்று அணைத்திறப்பு விழாவன்று சிறப்பான தெருக்கூத்துஒன்று நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள்.

விழாக்குழுத் தலைவர் குருவம்மாவிடம் நன்கொடை வாங்குவதற்காகக் கடைக்கு வந்தார்.

"குருவம்மா எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா?'' குருவம்மாவிடம்அவர் எப்போதும் அப்படித்தான் பேசுவார்.

"வசூலுக்குத்தானே! நான் எவ்வளவு கொடுக்கணும்னு நீங்கள் சொல்றீங்களோ அவ்வளவு தாரேன் நீங்கல்லாம் இல்லாட்டா நானேது இந்தக் கடைதான் ஏது?'' — குருவம்மா நன்றி உணர்ச்சியோடு சொன்னாள்.

"அஞ்சு ரூபா கொடு. போதும் குருவம்மா!' என்றார் குழுத்தலைவர்.

"இந்தாங்க அஞ்சு ரூபா எனக்கும் எங்க சக்குவுக்கும் இந்தாங்க இன்னொரு அஞ்சு ரூபா எங்க அண்ணனுக்கு!'' என்றாள் குருவம்மா.

குழுத்தலைவருக்கு முதலில் எறும்பு கடித்ததுபோல் இருந்தது. உடனே அடுத்து அவர் திடப்படுத்திக் கொண்டார். "வெட்கக்கேடு! அண்ணனும் அண்ணன்! ஊரை ஏய்ச்சு உலையில்போடப்பாக்கிறாளே' என்று ஒரு காலத்தில் நினைந்தவர்தான் அந்தக் குழுத்தலைவர். ஆனால் குருவம்மாவின் கபடமற்ற பேச்சும், அச்சம் தவிர்த்த நடவடிக்கைகளும் காலப்போக்கில் அவரைத் திருத்திவிட்டன. அதனால் அந்தக் குடியிருப்பில் முன்பே அவர் குருவம்மாவின் ஆதரவாளராகிவிட்டார்.

அப்போது பொன்னையா உள்ளே நுழைந்தான். அங்கே இருந்த தலைவரைப் பார்த்து அவன் "வாங்க தலைவரே, வசூல் எப்படியிருக்கு?' என்று கேட்டான்.

"வசூல் திருப்திதான்! உனக்காக குருவம்மா அஞ்சு ரூபா கொடுத்திருக்குது!' என்றார் தலைவர்.

"ஏன், எனக்காக அது ஏன் கொடுக்கணும்! நான் வேலை செய்யலே இந்தாங்க என் பணம்! குருவம்மா கொடுத்ததை அதுக்கிட்டேயே கொடுத்துடுங்க" பொன்னையா விடாப்பிடியாகப் பேசினான்.

குழுத்தலைவர் மனம் எங்கோ போய்விட்டது. கண்ணும் காதும் இல்லாதவரைப் போல் அவர் சிலையாக இருந்தார். "எவ்வளவு பேர் குருவம்மாவைப் பற்றி அவதூறுகப் பேசுகிறார்கள்! இது பொல்லாத உலகம். இங்கே அவளிடம் உன்னைப்போல் உண்டா என்று புகழ்ந்துவிட்டுப்போய் வெளியே அவளைக் கேவலமாகப் பேசுகிறார்களே, சண்டாளர்கள்! மனிதன் ஒரு கோப்பை இலவசத் தேநீருக்காக இரட்டை வேடம் போடுகிறானே இதெல்லாம் அவளுக்குத் தெரியாதா?'' குழுத்தலைவர் சிந்தனையை விட்டு வருவதற்குள் பொன்னையா என்னென்ன பேசினான் என்று அவருக்குத் தெரியாது ஆனால் பொன்னையாவின் கண்கள் மட்டும் நனைந்திருந்ததை அவர் பார்த்தார்.

"என்ன பொன்னையா இது?'' தலைவர் உணர்ச்சியோடு கேட்டார்

பொன்னையா பேசவில்லை லேசாகச் சிரித்தான்! குழுத்தலைவர் திகைத்தார் கண்ணீருடன் கலந்துவரும் புன்னகைக்குத்தான் எவ்வளவு ஒளி! எவ்வளவு அழகு!

"எனக்காக குருவம்மா நன்கொடை கொடுத்ததைநினைத்தேன். யார் பெற்ற மகளோ எங்கோ கிடந்துவந்த எனக்கு உரிமையுடன் கடமை புரிந்ததை எண்ணியதும் என் கண்கள் கலங்கிவிட்டன வேறு என்ன எனக்குத் துக்கம்?'' பொன்னையா சொன்னான். குழுத்தலைவர் அவன் முதுகில் தட்டிவிட்டுப் போய்விட்டார்.

ஃ ஃ ஃ

அணை திறப்பு விழா!

மதுரைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரண்டு வந்திருந்தார்கள். அதிகாரிகளெல்லாம் அங்கே முகாமடித் திருந்தார்கள். குறித்த நேரத்தில் அணை திறக்கப்பட்டு மண் செழித்தது, மக்கள் மனம்குளிர ஆரவாரம் செய்தார்கள். பெரியகுளம், தேவதானம், ஆண்டிபட்டி, தேனி உசிலம்பட்டி முதலிய ஊர்களிலிருந்தெல்லாம கூட்டம் அலைஅலையாக வந்து கொண்டிருந்தது.

குருவம்மாவுக்கு அன்று ஓய்வே இல்லை அவளால் உட்கார்ந்து கொடுக்க முடியவில்லை. கடையில் அவள் பம்பரம்போல் சுழன்று கொண்டிருந்தாள். போர்க்களத்தில் தனித்து நின்று போராடிய ஜான்சி ராணியைப்போல் அவள் வியர்க்கவியர்க்க வேலை பார்த்தாள்.

இரவு வந்தது!

அணைக்கட்டுப் பிராந்தியமே அன்று ஜோதி மயமாகத் திகழ்ந்தது. மதில்கள், மரங்களில்கூட வண்ண விளக்குகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. புதிய நகரமே உண்டாகி விட்டது போல் தோன்றியது.

விழாக்குழுத்தலைவர் சக்குபாய் டீஸ்டாலுக்கு ஓடிவந்தார். "குருவம்மா நீதான் நாடகப்பார்ட்டிக்கு சாப்பாடு தயார் பண்ணணும்! அவங்க நேரா குமுளியிலே இருந்து வாராங்களாம்! அதனாலே எங்கேயும் சாப்பிட வசதிப்படலையாம்! எப்படியாச்சும் ஏற்பாடு செய்திடு குருவம்மா! என்றார் குழுத்தலைவர்.

"கடையிலே ஏற்கனவே சமைத்த சாப்பாடு இருக்குது, அதோடு ஏதாவது வெச்சிட்டாப் போதாதா?'' என்றாள் குருவம்மா.

"ஓ! தாராளம்! பத்து முட்டையை அவிச்சுக்க! இருபது அப்பளத்தைப் பொறிச்சுக்க!'' என்றார் குழுத்தலைவர் உற்சாகமாக!

குருவம்மா இரண்டு நாழிகைக்குள் சாப்பாடு தயார் செய்துவிட்டாள்.

குழுத்தலைவர் அடுத்துஇன்னொரு கோரிக்கையை முன் வைத்தார்.

"குருவம்மா! குருவம்மா! நாடகப்பார்ட்டிக்காரங்க நம்ம சங்கத்திலேதான் தங்கியிருக்காங்க.. நீயே போயி அவங்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுட்டு வந்தா மேலாய் போயிடும்! நீதான் இப்ப எங்களுக்கெல்லாம் தாய்மாதிரி' என்றார் குழுத்தலைவர். அந்தக் காட்சி, சினிமா துண்டுப் பிரசுரம் கொடுப்பவனிடம் சிறுவர்கள் நோட்டீசுக்காகக் கெஞ்சுவதுபோல் இருந்தது. குருவம்மா அதற்கும் இசைந்தாள். கையில தூக்குச்சட்டியுடன் சக்கு முன்னே நடக்க விளக்குடன் குருவம்மா பின்னே நடந்தாள். நடக்கும் போதுதான் அவள் முகத்தில் எத்தனை சாயல்கள் அவளது அன்றைய இதயத்தை இடியாப்பத்திற்குத்தான் ஒப்பாகச் சொல்லலாம். மாவினால் பிழியப்பட்ட கம்பிகள் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிப் பின்னி இடியாப்பமாவது போல் பலநூறு எண்ணங்கள் குருவம்மாவின் இதயத்திற்கு ஒரு வடிவம் கொடுத்து இருந்தன.

தொழிலாளர்களின் சங்கம் வந்துவிட்டது உள்ளே ஆர்மோனியச் சத்தம், தபேலா ஓசை, பின்னணிக்குரல் எல்லாம் விட்டுவிட்டு ஒலித்தன குருவம்மா, சக்குவை வெளிவாசலில் நிறுத்திவிட்டு தூக்குச்சட்டியுடன் உள்ளே போனாள் அங்கே கிளிபோல் ஒரு பெண் — சின்ன வயதுப் பெண் — வாத்தியக் குழுவிற்கு நடுவே உட்கார்ந்து ஒத்திகை நடத்திக் கொண்டிருந்தாள்.

'சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்; சாப்பிட்டுட்டா நல்லது; சூடாயிருக்கு!'' — குருவம்மா சொல்லிவிட்டு முகத்தைத் துடைத்தாள்.

'ஏம்மா நீ யாரு?'' தபேலாக்காரர் கேட்டார்.

'ஏன் மாமா, நல்ல முகவெட்டு! தாயார்வேஷத்திற்கு கனப் பொருத்தம்! இல்லே மாமா?'

வெளியில்நின்ற சக்குவுக்கு இந்த உரையாடல் காதில் விழுந்தது அவள் கொதித்து எழுந்தாள் "ஏம்மா என்ன பண்றே உள்ளே! வா போகலாம். கூத்தாடிக் கழுதைங்க பேசற பேச்சைப் பாரு ஒனக்கு இன்னும் வேணும்' சக்குவின் அலறல் உள்ளே கேட்டது.

"வெளியிலே யாரு கத்தறது? போயி ரெண்டு குடுத்திட்டு வாங்க மாமா!'' என்று பதிலுக்குப் பேசினாள் அந்தப் பாடகி, அவள்தான் அன்றைக்கு 'ஸ்திரிபார்ட்!'

தபேலாக்காரர் வெளியில் வந்து சக்குவைக் கண்டபடி பேச ஆரம்பித்துவிட்டார். 'பிச்சைக்காரக்கழுதே! கூலிக்கார நாயி! சோத்துக்கடை மாடு!'' இப்படி நாடக வசனத்தில் ஆரம்பித்தார் தபேலாக்காரர். அவ்வளவுதான்! குருவம்மாவுக்கு நெறிகண்டுவிட்டது பெண் புலிபோல் சீறத் தொடங்கிவிட்டாள் "ஏய்யா, நீ அக்கா தங்கச்சியோட பொறந்தியா, இல்லையா? ஒரு வயசுப் பொண்ணுகிட்டே இப்படியா பேசறது? என்று தொடங்கினாள் குருவம்மா!

(தொடரும்)

★★★★★★★-★★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★★-★★★★★

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41. சங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50. ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரிந்து 22 காரட் கோல்டு பிளேட்டில் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும், செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருள் V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

கண்ணடக்கம்

பக்தன் ஒருவன் பதைக்கப் பதைக்க ஓடினான். அவன் கால்கள் தடுமாறின. வியர்வையால் மேனி குளமாயிற்று தலைமுடி அலங்கோலமாய் விரிந்து காற்றில் பறந்தது நெற்றியிலே பூசியிருந்த திருநீறும். அதன் மேல் வைத்திருந்த அகலமான குங்குமப் பொட்டுங்கூட வியர்வையிலே கரைந்து ரத்தமும் சீழும்போல அவன் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தன, புரையோடிவிட்ட புண்ணிலிருந்து கிளம்பிய துர்நாற்ற அருவிபோல் இருந்தது அந்த பக்தனின் முகக் காட்சி, தேவீ! தேவீ!! காளி தேவீ!! என்ற அலறல் வேறு,

நல்ல இருட்டு! கரைபுரண்டோடும் ஆற்று வெள்ளம். அதன் மீது ஒரு மூங்கில் பாலம். அதிலே நிதானமின்றி பக்தன் ஓடினான். கரையோரத்துச் சுடலையிலே எரிந்து கொண்டிருந்த ஒரு பிணத்தை ஆற்றுத் தண்ணீர் இழுத்துக்கொண்டு வருகிறது. அதை பக்தன் பார்த்தான். லோகமாதா! என அலறிக் கொண்டே திரும்பினான். தீவட்டிகளோடு நாலைந்து பேர் வந்துகொண்டிருந்தனர். ஒருவன் கையிலே கொள்ளிச் சட்டி; பிணந் தூக்கிக்கொண்டு வந்தார்கள் இது ஆற்றிலே மிதக்கும் ஈரப் பிணமல்ல, புதிய பிணம். மூங்கில் பாலத்தில் பக்தன் நின்றான்; ஒரே அமைதி,

புதிய பிணம் எரிய ஆரம்பித்தது, அதன் சொந்தக்காரர்கள் பிரிந்துவிட்டார்கள் இனி அது நெருப்புக்கோ அல்லது ஆற்றில் தெரியும் வாளை மீனுக்கோ சொந்தம்.

காலையில் சொந்தக்காரர்கள் உயிரோடிருந்தால் எலும்பு அள்ளிக் கொட்ட அங்கே வருவார்கள். அதற்குள் ஆறு அந்த வேலையைச் செய்தாலும் செய்துவிடும். பெருமூச்சு விட்டபடி மீண்டும் ஓட்டப் பயணத்தைத் தொடர்ந்தான் பக்தன். எதிரேசில தீவட்டிகள். பாடையல்ல! நீண்ட கழியில் ஒரு துணி ஏணை அதிலே ஒரு குழந்தை, விழிக்காத நித்திரை. கொள்ளிச் சட்டி கிடையாது. மண்வெட்டிகள் தூக்கி வந்தார்கள் சிலர். புதைக்கும் பிணம் போலும்! பக்தன் முன்னிலும் பன்மடங்கு வேகமாக ஓட ஆரம்பித்தான். காலிலே கருவேல் முட்கள் தைத்துக்கொண்டன அதையும் அவன் கவனிக்கவில்லை. கரையோரமுள்ள தாழை மடல்களிலே அவன் முகம் உராய்ந்தது. அதையும் அவன் கவனிக்கவில்லை. பழனிக்குப் பால் காவடி எடுப்பவனின் உடலிலே காணப்படும் அலகுகள் போல — சிலாகைகள் போல — அவன் உடலெங்கும் முட்கள் நீட்டிக் கொண்டிருந்தன. எதிரேயுள்ள பாழுங்கிணற்றை எப்படித்தான் தாண்டினானோ தெரியாது. பார்ப்பதற்கே பயங்கரத் தோற்றமளிக்கும் பாவாடைராயன், காத்தவராயன் கோயில்களை எப்படித்தான் கடந்தானோ அவனுக்கே தெரியாது! ஊர்க்கோடிக்கு வந்து சேர்ந்தான். அதோ... ஒரு கோவில்... சுற்றிலும் காடு — உள்ளே அந்த ஆலயம்! அம்மா! தாயே எனக் கத்தினான். ஆவேசம் வந்ததுபோல் ஓடினான் கதவு பூட்டியிருந்தது. மதிற் சுவரின் மீது தாவினான், அடுத்த பக்கம் குதித்தான், எதிரே காளிகாதேவியின் உக்கிரமான உருவம். உறுமும் சிங்கம் — உதிரம் கொட்டும் தலை — எல்லாம் சிலை வடிவில் தான்! அதனால் பக்தன் அச்சமின்றி அம்மையின் அருகே சென்றான்

கருணாநிதி

"பத்ரகாளி' மகாதேவி!! மகிஷாசுர மர்த்தனி" என்று கூவினான்.

"யார் அது?' காளி கேட்டாள்.

"என்னைத் தெரியவில்லையா?" என்று கதறினான் பக்தன்.

"தெரியவில்லை ..சொல்!"

"நான்தான் உன் பக்தன் காளிதாசன்!"

"எந்தக் காளிதாசன்? நாக்கிலே எழுதி நாவலனாக ஆக்கினேனே; அந்தக் காளிதாசனா?"

"இல்லை தாயே... நான் அவனில்லை நான் இயற்கையிலேயே கொஞ்சம் புத்தி சாலி ஆனாலும் உன்பக்தன்!'

"சரி போகட்டும் — பக்தா என்ன வேண்டும் உனக்கு?'

"என்ன தாயே இப்படிக் கேட்கிறாய்? ஊரிலே சூறை நடக்கிறதே உனக்குத் தெரியாதா?"

"சூறையா?"

"ஆமாம் தேவி கொள்ளை கொள்ளையாக மக்கள் சாகிறார்கள். கொடுமையான வாந்திபேதி கொடிய விஷக் காய்ச்சல்! பிளேக்காம்; புது வித இங்கிலீஷ் வியாதி! காமாலை' அய்யய்யோ... சொல்லத் தரமல்ல தாயே; கூடை கூடையாகக் குழந்தை பிணம் ..பாடை பாடையாக பெரிய பிணம்!"

"அய்யோ... அப்படியா? எனக்குத் தெரியாதே".

"உண்மைதான் அம்மா உண்மைதான்! உன் மக்கள் அனைவரும் இன்னும் ஓரிரு நாட்களில் ஒழிந்து விடுவார்கள்!"

"பக்தா! நான் ஒன்று சொல்லுகிறேன். கேட்கிறாயா?"

"ஆயிரம் சொல் அம்மையே!"

"கொடிய நோயினால் அழிந்துவிட்ட குடும்பங்களில் மிச்சமிருப்பவர்களிடம் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைச் சொல்!"

"அனுதாபத்தைக் கேட்க அடியேன் வரவில்லை சக்தி. அபயம் கேட்க வந்திருக்கிறேன் மாளுகின்ற மக்களை மீட்பதற்கு மாதாவிடம் முறையிட வந்திருக்கிறேன். இங்கு நான் வந்துவிட்டேன். இந்நேரம் எத்தனை ஜில்விட்ட உடல்களோ; கணக்குத் தெரியவில்லை — சுடலைக்கு ஓய்வு இல்லை. நெருப்புக்கு சரியான தீனி! எழுந்தருள்வாய் என் அம்மையே!"

"இயலாது அப்பனே! இயலாது என்னை மன்னித்து விடு பக்தா — போய் வா!"

"மன்னிப்பதா? நானா? அகிலாண்டேஸ்வரியை இந்தப் புல்லன் மன்னிப்பதா? மண்டியிடுகிறேன் — என்ன கோபம் இருந்தாலும் மறந்துவிட்டுப் புறப்படு பராசக்தி"

"புலம்பினாலும் அழுதாலும் புண்ணியமில்லை!"

"ஏன் காளி ஏன்? துஷ்டர்களை அழித்துத் தூயவர்களைக் காப்பாற்றும் அருள் விழி பெற்றவளே! அனந்தநாயகி! கருணை பொழியும் உன் கண்களைத் திறந்து, கதியற்றுச் சாகும் அபலைகளை அனாதைகளை உன் திருப்புதல்வர்களைக் காப்பாற்ற ஏனம்மா தயக்கம்?"

"கருணை பொழியும் கண்கள் எனக்கு இப்போதில்லையடா மகனே!"

பக்தனின் மெய் நடுங்கிற்று. குரல்கம்மிற்று கனைத்துக்கொண்டான் பீதியோடு காளியை நிமிர்ந்து பார்த்தான்... கர்ச்சித்தான்!

"கருணைக் கண் இல்லையா? காளியா நீ' அல்லது கள்ளியா? பிணக்கொலு கண்டு பெருமகிழ்வு கொள்ளும் பேய்க்கும் உனக்கும் என்ன வேறுபாடு? எருமையை வதைத்தாய் — சிங்கத்தை அடக்கினாய் — மமதையானன் சிரசை நறுக்கினாய் — அப்போதெல்லாம் உன் கண்களிலே கனல் உண்டு! மற்ற வேலைகளில் அன்புப் புனல் தானே உண்டு. அப்படித் தானே கேள்விப்பட்டிருக்கிறேன்; உன்னைப்பற்றி, நீ என்னை ஏமாற்றத்தானே பார்க்கிறாய்? உன் பிள்ளைகளின் உயிர்கள் பொலபொலவென உதிரும்போது உனக்கு இந்த காட்டோரத்துப் 'பங்களா'விலே ஓய்வு பெறும் வேலையா? மிக நன்றாகயிருக்கிறதம்மா தாய்ப்பாசம்!'

"மகனே! என்னதான் நீ திட்டினாலும், திப்பொறிபறக்க வசைபுராணம் பாடினாலும் என்னிடமிருந்து கருணையை எதிர் பார்க்க முடியாதே! காளிதாசனே. காளமேகத்தை கவிதை பாடச்செய்த காளியல்லடா நான் — இப்போது நான் கருணையற்றவள்! என் கண்களிலே அன்பின் ஒளி கிடையாது!"

இதைச் சொல்லும்போது காளியின் தொண்டை கரகரத்தது அழு குரல் கேட்டது. விம்மும ஒலி பக்தனின் காதைக் குடைந்தது. பக்தன் பதறினான்.

'ஏன் தேவி அழுகிறாய்? என்ன நடந்தது?'

'உன்னைப்போல ஒரு பக்தன் செய்த வேலைதானடா எல்லாம்!'

என்ன செய்தான்? எந்த பக்தன் பாதகம் புரிந்தான்? பார்வதிதேவிபார் அழவேண்டிய கஷ்டத்தைச் சிருஷ்டித்தவன் யார்? பத்மாசனீ சொல்லம்மா!

"கேள் கவனமாக! உலகத்து மக்களையெல்லாம் ஒருசேரக் காப்பாற்றும் திறனும் திறமையும் பெற்றவள்தான் நான்! அதுபோலக் காப்பாற்றியும் வந்தேன். இப்போது ஊரிலே நடப்பதாக வர்ணித்தாயே பயங்கரச் சாவும், அதற்குக் காரணமான நோய்களும் — அவைகள் எல்லாம் என் பார்வைபட்ட மாத்திரத்தில் பஞ்சாய்ப் பறக்கும். பரமசிவனாரின் நெற்றிக் கண்ணுக்குமில்லாத சக்தி என் நேத்திரங்களுக்கு உண்டு என்று அவரே கூறிடுவார் என்னை அணைத்திடும்போது' அநீதியை அழிக்கும் அக்கினியும் உண்டு, அனாதைகளை ரட்சிக்கும் அருள் நோக்கும் உண்டு' என் விழிகளுக்கு அந்தச் சக்தியைப் பாழ்படுத்திவிட்டானப்பா ஒரு பரமபாதகன்!"

"எப்படித்தாயேஎப்படி?" பக்தன் பதறினான் மறுபடியும்!

"குறுக்கிடாமல் கேள் மகனே! ஒரு பக்தன் பணக்காரன்! அவனுக்கு ஒரு குழந்தை, அந்தக் குழந்தையின் கண்ணிலே ஏதோ சிறிய கோளாறு! எனக்குப்பிரார்த்தனை செய்துகொண்டான். குழந்தையின் கண் வர வர கெட ஆரம்பித்தது. மருத்துவர்கள் மருத்துவப் பச்சிலைகள் மூலம் சிகிச்சை ஆரம்பித்தனர். குழந்தைக்குக் கண்கள் சுகம்பெறத் தொடங்கின அப்போது பக்தன் பிரார்த்தனை செய்து கொண்டான். அதன்படி கண்ணடக்கம் செய்து வைப்பதாக வேண்டிக்கொண்டான். கண்ணடக்கம் என்றால் உனக்குத் தெரியுமல்லவா?'

"ஆமாம் தேவி தங்கத்தாலோ வெள்ளியாலோ கண்போலச் செய்து விக்கிரகத்தின் விழிகளிலே பதிப்பது என்று சொல்வார்கள் நான் பார்த்ததில்லை"

"பார்த்ததில்லையா? இதோ என் கண்களில் பதித்திருப்பதைப் பார் இதுதான் கண்ணடக்கம்! அந்த பக்தன் செய்த பிரார்த்தனை!"

'அதற்கும் நான் வந்த காரியத்திற்கும் தொடர்பு என்ன தாயே?"

"முட்டாளே, இன்னமும் புரியவில்லையா? கருணை காட்டிக் காப்பாற்றும் சக்தி பெற்ற என் விழிகளைத்தான் வெள்ளிக் கண்ணடக்கம் என்ற மூடிபோட்டு அடைத்துவிட்டானே நான் எப்படியடா வெளியில் கிளம்புவது? கண் கட்டப்பட்ட எனக்கு கதி ஏதடா? அடைபட்ட கண்ணிலிருந்து அருள் எப்படியடா கிளம்பும?

"பக்தனல்ல அவன்; பாதகன்! தாயே! அவன்தான் அக்கிரமம் செய்தான் என்றால், நீயாவது உடனே இந்த வெள்ளி மூடியை அகற்றியிருக்கக் கூடாதா?

"அகற்றுவதா? பக்தன் செலுத்திய காணிக்கையப்பா இது! அகற்றுவது ஆகுமோ? தகாது — தகாது!"

"பக்தன் அளித்ததை நீ அகற்றுவது தகாது! இதோ நான் அகற்றுகிறேன். உன் கண் திறக்கட்டும்'.

கருணை பொழியட்டும் ஊரார் வாழட்டும், உன் உலா நடைபெறட்டும்' என்று ஆவேசமாகப் பக்தன் பாய்ந்தான். காளியின் கண்களில் பதிக்கப்பட்டிருந்த வெள்ளிக் கண்ணடக்கத்தைப் பிடுங்கி எறிந்தான்!

காளியின் கண்களைப் பக்தன் உற்றுப் பார்த்தான்!

'இப்போது என்னைத் தெரிகிறதா தாயே?'

"தெரிகிறது — என் மீது பிரியமுள்ள முட்டாள் என்று'

"என்னம்மா மீண்டும் பழி சுமத்துகிறாய்? — நன்றிகாட்டு தாயே எனக்கு — எமனுலகு செல்லும் மக்களை மீட்க அன்புமழை கொட்டும் விழிகளைத் திறந்திருக்கிறேன் நான்!"

"விழிகளைத் திறந்தாய் — ஆனால் ஒளிதர உன்னால் இயலாது! பத்து வருடமாக மூடிக்கிடந்ததால் தூர்த்துவிட்ட கிணறு போல் ஆகிவிட்டதப்பா என் கண்கள்! ஒரு ஆண்டா, இரு ஆண்டுகளா? பத்து ஆண்டுகள் அல்லவா? இந்தக் கண்ணடக்கம் என் விழியை மறைத்துக் கொண்டிருக்கிறது இனி என் கண்களுக்கு ஒளி தர அந்த ஒளியிலே கருணை ததும்பச் செய்ய யாராலும் முடியாது' தயவுசெய்து போய்விடு' — காளி அழுகுரலோடு ஆத்திரமாகப் பேசினாள்.

பக்தன் சற்று நேரம் நின்றான் — காளியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான் நெற்றியிலே மிச்சம் மீதி ஒட்டிக் கொண்டிருந்த குங்குமம் திருநீறு ஆகியவற்றை நன்றாக அழித்து நெற்றியைத் தூய்மைப் படுத்திக் கொண்டான். கோயிலிருந்து விடுபட்டு ஊரை நோக்கி ஓடினான்

எதிரே, இரண்டு மூன்று கார்களில் டாக்டர்களும் அவர்களுக்கு உதவியாளர்களும் வந்திறங்கினார்கள். ஊர் மக்கள் அனைவருக்கும் நோய்த்தடுப்பு ஊசிகள் அவசர அவசரமாகக் குத்தப்பட்டன ஊருக்குத் தேவையான — உடனடியாகச் செய்ய வேண்டிய சுகாதார வேலைகளை இரவோடு இரவாக டாக்டர்கள் செய்யத் துவங்கினர். பக்தனும் அந்தப்பணியில் முன் நின்றான்.

ஃ ஃ ஃ

திடீரெனக் கண்விழித்துக் கொண்டேன். கண்வைத்திய சாலையில் இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில் படுத்திருப்பதை உணர்ந்தேன், எனக்குச் செய்ததுபோல எத்தனை ஆப்பரேஷன் செய்தாலும் அந்தக் காளிக்குக் கண் திறக்காது என்பதை எனக்கு நானே எண்ணிக் கொண்டு சிரித்துக்கொண்டேன் — அந்த வேதனையான வேளையிலும்!



எம். ஜி. ஆரின் இலஞ்ச பேரம்!

எம். ஜி ஆர். கேட்டாரம், என் மீது உருப்படியான ஒரு குற்றச்சாட்டை கருணாநிதியால் சாட்டமுடியுமா? தயாரா? என்று சவால் விட்டாராம்.

நேற்று இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அருமை நண்பர் சமது அவர்கள் எம் ஜி. ஆருடைய அமைச்சரவையில் இருக்கின்ற ஒரு அமைச்சர் தன்னுடைய தம்பியின் பெயரால் உருளைக்கிழங்குத்தோட்டம் ஒன்றை ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம்ரூபாய்க்கு குத்தகைக்கு எடுக்கக்கூடிய தோட்டத்தை 1800 ரூபாய்க்கு பினாமியாக குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கின்ற கொடுமையை, ஊழலை நேற்றைக்கு இங்கே வெளியிட்டார். இதற்கு எம். ஜி. ஆர் என்ன பதில் சொல்கிறார் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இரண்டு வார காலமாக தமிழகத்திலே இருக்கிற பஸ் முதலாளிகளை எல்லாம் மிரட்டி உருட்டி ஆளுக்கு ஐந்தாயிரம், மூவாயிரம் இரண்டாயிரம் என்று தர வேண்டும்; கட்சி நிதி வேண்டும் என்ற பெயரால் நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. பேரம் என்ன தெரியுமா?

அரசாங்கப் பஸ்கள் — சோழன் போக்குவரத்துக் கழக பஸ்கள் ஆனாலும், பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள் ஆனாலும் அதைப் போலவே பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்கள் ஆனாலும் அண்ணா, கட்டபொம்மன், பெரியார் போக்குவரத்துக் கழக பஸ்கள் ஆனாலும் வழித்தடங்கள் இன்றைக்குக் காலியாகிவிடுமானால் வழித்தடங்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த ரூட்டுகளில் புதிய வழித்தடங்கள் அதிலே பஸ்விட அனுமதி கோரவேண்டியது அரசாங்கச் சார்புடைய பல்லவன், சேரன், சோழன், கட்டபொம்மன், பெரியார் ஆகிய போக்குவரத்துக் கழகங்களுடைய உரிமை. இதுதான் கழக ஆட்சியில் இருந்தது

இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கும் பேரம் நாங்கள் 'எங்களுடைய அரசாங்க பஸ்களை அங்கே செல்வதற்கு அனுப்போடவில்லை. அப்படிப் போட்டிருந்தாலும் வாபஸ் வாங்கிக் கொள்கிறோம். அங்கே தனியார் பஸ்கள் விட நாங்கள் தாராளமான அனுமதி தருகிறோம்' என்று அதற்குப் பேரம் பேசி இன்றைக்கு 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று ஏறத்தாழ 2 கோடி ரூபாய்க்கு பேரம் முடிந்திருக்கிறதாம், கட்சி நிதிக்காக!

அந்த 2 கோடி ரூபாயில் பாதிப்பணம் ஒரு கோடி ரூபாய் வசூல் ஆகிவிட்டதாம். அவர்கள் இதற்குப் பெயர் கட்சி நிதி என்று சொல்வார்கள். ஆனால் நான் சொல்கிறேன். இதற்குப் பெயர் லஞ்சம். பச்சை லஞ்சம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு நண்பர் எம் ஜி. ஆர். என்ன பதில் சொல்கிறார் என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

— கலைஞர்

(மதுரை தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்)

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி !

23–7–78 இதழ் தொடர்ச்சி 67 607–03

அறந்தாங்கி பீ. விஜயலட்சுமி. செங்கல்பட்டு; எம். சீனுவாசன் சென்னை-57 எம். எஸ். வீரசேகர், கே. வீராசாமி, சென்னை-39 பி கே பாபு கிண்டி கே. சட கோபன், லட்சுமிபுரம் ஆர். குப்புசாமி. சென்னை-21 ஒப். கே. போஸ். சென்னை-18 இ. வீரகுமார், சென்னை-21 பி எஸ். சத்தியநாதன். சென்னை-1 சிவசுப்பிரமணியம். எம். ஜான்சன்; ஏ சிவராம கிருட்டிணன். பொள்ளாச்சி எஸ். தமிழ்செல்வன், எம். காளியப்பன், சென்னை-56 என். வி. இராமச்சந்திரன். புரசைவாக்கம் எஸ் ஆரோ கியதாசன். திருச்சி நடேசன். எஸ் ஜோசப் ராஜ். எம். காதர். பாவுந்நன். அன்பழகன் யூசுப். சென்னை-23 கோவிந்தராசலு சிவப்பிரகாசம். ஏ. பாபு, எம். செய ராமன். ஜி கோபால். சென்னை 26 எஸ் சிவபாலன், கோவை காலிங்கராயன் புதூர் கே. பி. தண்டபாணி. எஸ் சக்கரபாணி. எஸ். பொன்னுசாமி. கே. ஏ. கருப் பண்ணன். எம். சுப்பிரமணியம், பி. இராசு, பி. சக்தி கணபதி ஆகிய 36 பேர் ரு 5-வீதம் 180 00

கோவை சின்னுசாமி கா புதூர் கே ஏ சாமியப்பன், காளிங்கராயன் பாளையம் மணி ஏ. பி. கன்னையன். கே. சி இலட்சுமணன், அன்னலட்சுமி ஆர். இராமன், கா. பாளையம்புதூர் முத்தான், கே ராசு செங்கோட்டையன் வ ஆ குருசிலாப்பட்டு பி. இராசமாணிக்கம்; திண்டுக் கல் என். வேலுசாமி. பெங்களூர் பி. முனிசாமி, பி. கலியபெருமாள் ஆகிய 14 பேர் ரு. 5- வீதம் 70 00

கோவை பவானி இராமசாமி. காளிங்கராயன் பாளையம் புதூர் கே. வி மணி. பவானி கே. ஆர். துரைக்கண் ணன், கோவிந்தராசன், கருப்பசாமி, நாச்சிமுத்து, கே எம். நல்லசாமி கே எஸ் முத்து, கே எம். இராம சாமி, கே. எம் பழனிசாமி நாச்சிமுத்தாயம்மாள், மூர்த்தி, சேலம் இளங்கோ, ஆத்தூர் அப்பாசு, மேலப் பாளையம் ஆறுமுகம், மதுரை வண்ணம்பட்டி கிளை சார்பில் து. பெரியதம்பி ஆ- அமல்ராசு கும்பகோணம் தேவராசன் திருச்சி-14 நாதன், தெ. ஆ. கோழியார் எம். பரமசிவம். பண்ருட்டி வி. அரங்கநாதன். டி. கிரி ராஜன். சேலம் பாண்டமங்கலம் அ. சந்தானம், நெய் வேலி-3 எம். இராமலிங்கம். கோவிந்தசாமி நெய் வேலி-10 பி சிவம். எம். கோவிந்தராசன். தேவ. இள மதி. பி இராசசேகரன், சி சுப்பிரமணியன், சண்முகம் வேலாயுதம், பி. இராசசேகரன், கோ. ஏழுமலை, கலிய பெருமாள் ஆகிய 36 பேர் ரு 5- வீதம் 180 00

நெய்வேலி-1 பி. சுப்பிரமணியன், ஏ பக்கிரி, கோவை கொளிஞ்சிவாடி ஸ்டாலின் அன்பானந்தன், மதுரை 1 க. இராமன் பி அப்பாதுரை, ஏ. வெள்ளைகண்ணு, அருணாசலம், ஏ. அருள்துரை. மீனாட்சி சுந்தரம். சவுஸ்பாட்சா, கே. எஸ். மிக்கேல்; எம். இராசு எஸ் ஜெயராம், தர்மபுரி இடைய நல்லூர் இரா. சம பங்கி ஆகிய 14 பேர் ரு 5- வீதம் 70 00

தஞ்சை-1 எம். நடனசிகாமணி, சிக்கல் பொ கணபதி. கா. சின்னையன், வ. ஆ. பஞ்சாபத்ர மைன் கவுன்சில் சேர்மன் டி. ராஜரத்தினம். தஞ்சை மா. கருப்பையன். திருவையாறு சௌசல்பா கோவிந்தராசன் திருச்சி கருவடச்சேரி ந தில்லகாளி. முகவை அ தேக்கூர் டாக்டர் கே- பி. விசயன், நடையனேரி என். இராம சாமி. பவானி காளிங்கராயன் பழையூர் பி. பெருமாள் எம். மாரசாமி கே. கே. கருப்பண்ணா பி வி பொரிய சாமி ஏ. பி. செல்லப்பன், ஏ ரங்கசாமி. கிருஷ்ணன் வ. ஆ கண்ணமங்கலம் கே து புசாமி கோவை கரு வாயூர் சின்னம்மாள் விஜயலட்சுமி தஞ்சை அண்ணா நகர் எம். கிருஷ்ணமூர்த்தி, சென்னை 1 என் பாரத தீபன், வி. எஸ். ஆறுமுகம். எம். பி முருகேசன், திருச்சி-8 ஏ. கே அப்துல் ரசாக் திருப்பத்தூர் வி. லோக நாதன், என். திருமால் டி. ஜி. நாகராசன். கொரட்டி கிருட்டிணன், ஞானப்பிரகாசம், அங்கப்பன். இ சுப்பிர மணியம். இரா. சந்திரசேகரன் ஏ. பி. பழனிசாமி, பெங்களூர்-4 கே. எல். இராஜ் ஆம்பூர் எம். சுப்பிரமணி ஆகிய 36 பேர் ரு 5- வீதம் 180 00

சென்னை-83 கோ. ரகுராமன். வ ஆ. கொரட்டி தேவப் பிரியம், சுப்பிரமணி தருமபுரி வரட்டனபள்ளி ஜி. நாராயணன் ஜோலார்பேட்டை எஸ் பி பூபாலன், கே. ஜி. முனிராஜ், பலராமன் கே. வி சீதாபதி. கே. எஸ் சின்னசாமி, டி. இராமசாமி இ பலரான் காந்தி நகர் ஜே இரங்கநாதன். நீயூடவுன் ஆர். வெங்கடேசன், வாணியம்பாடி எம். பாலகிருஷ்ணன் ஆகிய 14 பேர் ரு. 5/- வீதம் 70 00

வேலூர் பி; ஜி. வெங்கடேசன் தாம்பரம் மு ஆறுமுகம் சுந்தரமூர்த்தி. ஏ விசுவராஜ் கல்பாக்கம் ஒப். பி. ஷெரீப் சென்னை-18 ஆ. ஏழுமலை. குமரி கலியக்கா விளை எஸ். ஏ கரீம். சென்னை-45 என். வேலுசாமி. ஆனந்தபுரம் வி தங்கதுரை. செஞ்சி துவராகா ஆச் சாரி, செங்கற்பட்டு நேசம் சென்னை-13 கே கன்னியப் பன், குப்பன், கேசவமூர்த்தி, மந்திரலிங்கம், கோ. இந்திராணி சென்னை-21 கோஷி. வி எம் சுலைமான், சந்திரகாந்தா கோதண்டம், ராஜ்குமார் இரா. வி. கோதண்டம் ஏ நடேசன். அஸ்மதபீபி காசிலிங்கம், ஜி- சுப்பிரமணி சென்னை-13 சுப்புலட்சுமி எம். பி. பாலகிருஷ்ணன் ஏ. இ. பாஷா டி- பி. இராமன் ஆர். பிரகாசம். எண்ணூர் டி. எத்திராஜுலு சி. முனுசாமி. ஆர். சுந்தரராஜன் முத்து லோகாபிராமன். சென்னை-83 வி. கணபதி கோடம்பாக்கம் இரங்கசாமி, ஆகிய 37 பேர் ரு 5/- வீதம் 185 00

சென்னை-35 ஆர். கே குணசீலன். எஸ். சீத்தாராமன் வி. கே. கண்ணன் சாமிநாதன், ஆலந்தூர் அந்தோணி தாஸ் தேனாம்பேட்டை இராமலிங்கம். தி நகர் ஜி. துரை ஆ மரியதாஸ் ஜெபராஜ் எஸ் பெரியசாமி. எஸ் முத்துராமன் கே ஆர் சாமி அப்பா திருமுடி வாக்கம் பரமேஸ்வரி பொன்னுவேல் ஆகிய 13 பேர் ரு 5- வீதம் 65 00

சேலம் உள்ளிபுரம் இரா. வெங்கடாசலம். சி வீரப்பன் ஆர் நரசிம்மன். ஜான்சன்பேட்டை க அறிவழகன், ஆத்தூர் டவுன் பழனியாண்டி. மோசுனூர் அர்ச்சுனன். எஸ் நவலடி இலக்குமணன். கோவை-1 எஸ் தமிழ்ச் செல்வன், காலடிப்பேட்டை வெ. சு. குணாளன். திரு வள்ளுர் திருவேங்கடம்; ஆயக்குடி ஈசுவரன், ஆகிய 11 பேர் ரு 5-வீதம் 55 00

முகவை அண்ணாநகர் இராசாமணியம்மாள். காரைக் குடி மெ. முத்துக்குமார். புதுக்கோட்டை பனையபட்டி மு கருமாடி, தஞ்சை திருக்குவளை கே. சேதுராமன், கல்யாணமகாதேவி வைத்திலிங்கம். நன்னிலம் கே. நடராஜன் பூ கோவிந்தராசன், இலவங்கார்குடி வி. பாலகிருட்டிணன். அ ஜோசப். சி உத்திராபதி. கோ. தியாகராசன் இரா. யக்ஞசாமி கோ. இராமநாதன், ச செந்தாமரை அகத்திருநல்லூர் சி. கலியபெருமாள், மணக்கால் அய்யம்பேட்டை வி. சுந்தரமூர்த்தி அடி யக்கமங்கலம் பி. பாரதி, கோவை-1 டி. சண்முகம், ஆர். மோகனராசு, கே. நடராசன். இரா. ஆறுமுகம், ஆர். நாகராசு, சேலம்-3 பொன்னம்பலம், காமாட்சி, பரமசிவம் ஆகிய 25 பேர் ரு. 5-வீதம் 125–00

சேலம்-3 செல்வராசு, கோவை-18 எம். அங்கமுத்து, கோவை-26 எம. இராசகோபால், மதுரை நரிமேடு ஆ. மு. ஆறுமுகம். மதுரை-11 என். இலக்குமணன், என். ஆர். விஜயன். ஜெயபால் சுப்பையா. என். எஸ். இராசு சபராஜா. சின்னசாமி, கோவை-8 அ. கபீர். பொள் ளாச்சி டி. இராமசாமி, என். கந்தசாமி ஆகிய 14 பேர் ரு. 5-வீதம் 70–00

வேலூர் ஜி. சேகர். சென்னை-13 சிலையப்பன், சென்னை-19 ரவிச்சந்திரன். எஸ். துரைசாமி சென்னை-57 எஸ். ஏ. அமீர்ஜான். ஜே. பார்த்தசாரதி வ. ஆ. திருப்பத்தூர் கே. முகமது ஜகிரிபா. வி. இரத்தினம், பி. தயானந் தம் பி. எம். சுப்பிரமணி, திருவள்ளூர் பாலு. கே. எம். சுப்பிரமணி எம். பி. சுப்பிரமணி எம், ஏ சுபான், அண்ணாமலைநகர் ஏ. அப்பு சிதம்பரம் இரங்கநாதன், பி. வெங்கட்ராமன், மதுரை எஸ். அழகர்சாமி சேலம் கே பெருமாள், பெங்களூர் கே பெரியசாமி, வி. பி. மணி. எம் மதிமாறன் என். கிருஷ்ணமூர்த்தி வி கே. நடேசன், எம். மன்னர், டி எஸ் மணி வ. ஆ திருப்பத் தூர் இராமலிங்கம், பி. ஏ. வளத்தான், வி முருகானந் தம். திருமதி இராதா நடராசன், நாட்ராமபள்ளி டி. விஜயலட்சுமி தனலட்சுமி விழுப்புரம் விஜயலட்சுமி, திருக்கோவிலூர் டி. முனியன் கோவை கே. சண்முகம், அச்சிறுபாக்கம் எஸ். சுந்தரபாபு ஆகிய 36 பேர் ரு 5-வீதம் 180–00

அரக்கோணம் என். வேல்முருகன், திருத்தணி ஏ. சண் முகம். பெங்களூர் எஸ். அன்பழகன், ஜெ. மோகன்ராசு, டி. கிருட்டிணசாமி எம் கிருட்டிணன், எம். குப்பு சாமி, சி. சுப்பிரமணி எஸ் எம். பாபுதேவகுமார், கே. குமாரி. கே அரிதாஸ், எம். ஜெயராமன், சி. மன்னர், எம் கோபால் ஆகிய 14 பேர் ரு 5-வீதம் 70–00

திருச்சி-8 டி. விஜயன், வி. கணேசன். நெல்லை-6 கே ஆழ் வார் திருச்சி-5 கே. எஸ். அர்ச்சுனன், மு. சீனுவாசன், டி. என் சோமசுந்தரம், ஆர். எஸ் ஏ. சேக்கு, ஆர் எஸ் எம் பதர், உ லெப்பை சா தட்சிணாமூர்த்தி, எம் யூசுப். எஸ் தாவூத்சா, இரா தில்லைநாதன், பி எஸ் தனராயன் வி மகாமுனி. மு சிவசிதம்பரம், மு இராமசாமி, மணி யன் அர்ச்சுனன் சுந்தரமூர்த்தி ஞா அடைக்கலராஜ், கோவிந்தராசு ச. க ஜோசப், மு நீலகண்டன், கே ஜி. இராதாகிருட்டிணன் ஆகிய 25 பேர் ரு 5-வீதம் 125—00

ஆகமொத்தம் ரு — 69,232–03

கடத்தல்-காரர்களின் சொர்க்கம்!

இராஜஸ்தான் மாநில அரசின் பைரான் சிங் ஆட்சி ஆட்டங்காண ஆரம்பித்துள்ளது. இராஜஸ்தானில் கட்டப் பட்டு வரும் கால்வாய் திட்டத்திற்கான சிமெண்ட் ரூபாய் ஐந்து கோடிக்கு மதிப்புள்ளதை நாசகார கும்பல் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறது.

அரசு இந்தக் கால்வாய் திட்டத்தை கௌரவப் பிரச்சினையாக எண்ணி வந்தது. இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தி வந்த ஊழல் அதிகாரிகளும், இஞ்சினியர்களும், கொள்ளைக்காரர்களும், ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருப்பதை முதல் அமைச்சர் கண்டு பிடித்ததும் அதிர்ச்சிக்கு ஆளானார்.

ஆயிக்கணக்கான சிமெண்ட் மூட்டைகள் பாகிஸ்தானுக்குக் கடத்தப்பட்டு இருக்கலாம் அல்லது கறுப்புச் சந்தையில் விலையாகியிருக்கலாம், என்று அந்த கால்வாய் திட்டப் பகுதியைச் சார்ந்த சட்டமன்றஉறுப்பினர்கள் முதல் அமைச்சரிடம் கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றிஊழல் இஞ்சீனியர்கள். அதிகாரிகள் ஆகியோர் மீதும் விளக்கமான விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்கள்.

அந்தக் கால்வாய் பகுதியில் பயங்கர அச்சம் குடிகொண்டுள்ளது. விரல் விட்டு எண்ணக் கூடிய நேர்மையான அதிகாரிகளையும், இஞ்சீனியர்களையும் கடத்தல் காரர்களும், கறுப்புச் சந்தைக்காரர்களும் மிரட்டுவதோடு, விளைவுகள் விபரீதம் ஆகிவிடும் என்றும் அச்சுறுத்தி வருகிறார்களாம்.

ஓ, ஓடக்காரனே!

(இரகுமான்கான் பி. ஏ., பி எல்., எம். எல். ஏ.)

எனது அன்பிற்குரிய இனிய தலைவனே!
புல்லாங் குழல்களிலும் புகையும் எரிமலைகளை
சிருஷ்டிக்கும் புரட்சித் தாயின் தலைமகனே!
கிழக்கு வானின் ராஜவீதிகளில் உலாவரும்
உதயசூரியனும்—

இரவின் விடியலில் கீதமிசைக்கும்
புள்ளினமும்—
தென்றல் காற்றில் இதழ்விரிக்கும்
சிவப்பு ரோஜாவும்—
இளைஞர்களின் மகிழ்ச்சி ஆரவாரமும்—
மக்களின் ஜெயக் கோஷமும்—
உனது பெருமைகளைப் பிரகடனப்படுத்திக்
கொண்டிருக்கின்றன

திருக்குவளையில் கண்மலர்ந்த தியாக மலரே!
பொன்னி நதி தந்த பொன்பூமியின் சீதனமே!
அதோ...உனது அன்பிற்குரிய சகோதரர்கள்
பாரசீக தோட்டத்து புல் புல் பறவையாக
தங்களின்

பொன் உதடுகள் திறந்து உனது
பெருமைகளைப் பாடுகிறார்கள்
அவர்களின் அந்த இனியபாடல் கந்தர்வ
கானமாய் எங்கும் எதிரொலிக்கிறது
வசந்தத்தின் உதயமே!
விடியலின் உதயரேகையே'
வாழ்வின் இனிய ராகங்களுக்காக
காவிரிக்கரையில்

காத்திருக்கும் தமிழ் இனம் உன்னை
கரம் கூப்பி வணங்குகிறது
சுரண்டல் சூரியனின் வெப்பத்தால்
சாம்பலாகிப்போன
சருகாக காட்சியளிக்கும் பாட்டாளி வர்க்கம்
இங்கே ஒரு நம்பிக்கை புஷ்பம் பூத்த
மகிழ்ச்சியில்

உனக்கு வாழ்த்துக்களை கூறுகிறது
துயருள்ள மக்களின் துருவ தாரகையே'
சூன்ய பிரதேசமாய் இருக்கும் எங்கள்
பூமியை சொர்க்கத்தின் மறுபதிப்பாக்கப்
புறப்பட்ட

இளவேனில் தென்றலே'
உனது கூரை நிழலில் இளைப்பாறிக்
கொண்டிருக்கும்
ஏழை எளியவர்கள் உனக்காகத் தங்களின்
இதய வாசல்களை திறந்துவைத்திருக்கிறார்கள்
சாமான்யன் என்று சொல்லி சரித்திரம்
படைத்தவனே!

புதுயுகம் காண பூபாளம் பாடும் அக்னி
வீணையே!
சோஷலிச வானத்தின் நீல நிற வீதிகளில்
சிறகு விரிக்கும் பீனிக்ஸ் பறவை நீ.
கறுத்துக் கிடக்கும் சேரிப் புறங்களுக்கு
ஜீவ ஒளிவழங்கிய தமிழகத்தின்
அம்பேத்கார் நீ!

கால மகளின் கண்விழிப்பே'
உனது ஜீவ யுத்தத்தால்தான் எங்கள் தமிழ்
தாயின் அடிமை விலங்குகள் சுக்குநூறாயின!
உன்னால்தான் எங்களின் தமிழ்த்தாய்கம்பீரமாக
பவனி வருகிறாள்.
அன்னைத் தமிழை காத்திட அக்னிபர்வதங்களை
தாண்டியவனே!

பகுத்தறிவுச் சமுதாயத்தின் ஞானப்பிரசவமே!
சுயமரியாதைக்கொள்கைகளின் சுடரொளியே!
சுதந்திர இந்தியாவில் சுதந்திர காற்று
சுவாசிக்கப்படவேண்டும் என்பதற்காக தமிழக
வீதிகளில் குருஷேத்திரம் நடத்தியவனே!
இங்கே ஒரு பூ மலரும் என்று
நம்பிக்கையோடு மாநில சுய ஆட்சிக்காக
புனிதப் பயணம் நடத்தும் எங்களின்
அண்ணனே!

மவுனமும், சோகமும், புலம்பலும் நிரம்பி
இருக்கும் எங்களின் கர்ப்ப கிரகத்தில்
உன்னால் புதிய நம்பிக்கைகள் பிரதிஷ்டம்
செய்யப்பட்டு இருக்கின்றன.

இலட்சிய பூமியின் ஸ்தாபிதத்திற்காக
திறந்த வெளிச் சதுக்கங்களில்
இரத்தம் சிந்திய நமது சகோதரர்களின்
குருதி சுவடு இன்னும் நெருப்பைப்போல்
கனன்று கொண்டிருக்கிறது.

இரத்தம் சொரிந்த அந்த செம்பாதையில்
உனது பயணம் தொடரட்டும்.
எனக்குத் தெரியும் அந்தப்பாதை பாரிஜாத
மலர்களாலும்,

பவள மல்லிகையாலும் நிரம்பப் பெற்றதல்ல
அது ஒரு அக்னி ஆறு
என்றாலும் உன்னால் நீந்தமுடியும்.
நீ தென்றலை தீண்டியதில்லை. ஆனால்
தீயை தாண்டியிருக்கிறாய்
அண்ணாவின் கண்ணீர் துளிகள் எனது
கல்லறையை நனைக்கட்டும் என
பிரார்த்தித்தவனே!

ஒரு வெறிபிடித்த கழகத் தொண்டன்
இங்கே உறங்குகிறான் என எனது
கல்லறையில் எழுதுங்கள் என யாசித்தவனே!
தமிழ் இனத்தை பொன்பூமி நோக்கி
அழைத்துச் செல்லும் தொண்டனுக்கு
செருப்பாக பயன்படுவேன் என்றுரைத்தவனே!
கல்லறைகளின் மடியில் கனவு காணும்
இலட்சியவாதிகள் உயிர்பெற்று உனது
கண்களில் நடமாடுவதைக் காண்கிறேன்.

நீ ஒரு கறைபடிந்த கரமாம்
இங்கே சில சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன
உன்னை அரசியல் அரங்கில் இருந்து
அப்புறப்படுத்த வேண்டுமாம்
சில தெருவோரத்து நாய்கள் இங்கே
குரைக்கின்றன

நேசிக்கத் தெரிந்தவர்களுக்கு தனது
இதயவாசல் திறந்து வைத்திருக்கும்
எனது இதய தீபமே!
உன்னை இந்த உலகில் யாராலும்
அழிக்க முடியாது

நீ ஒரு இரத்த புஷ்பம்.
நீ ஒரு புயல் மேகம்!
உன்னைக் காயப்படுத்த முயன்றவர்கள்
தங்களின் காயங்களுக்கு மருந்து போட்டுக்
கொண்டிருக்கிறார்கள்

ஞாலம் போற்றும் ஞானகங்கையே'
இங்கே இன்னும் எட்டப்பர்கள் அழியவில்லை.
புருட்டசுகள் புதிய வேடம் தரித்து
அலைகிறார்கள்.

நீ அரிதாரம் அல்ல, கலைந்து போவதற்கு
நீ காகிதப் பூவல்ல, கசங்கிப் போவதற்கு
நீ காலத்தால் அழியாத கல்வெட்டு!
நீ யுகங்கள்தோறும் பூத்து நிற்கும்
அக்னிபூ.

இருளின் திரையை கிழித்த எங்களின்
இதயவேந்தனே!
இரவு நீள்கிறது
வான வீதியில் கருமேகங்கள் படர்கிறது.
பேய்மழையும், அசுரக் காற்றும் எங்கும்
வீசுகிறது
ஓ, ஓடக்காரனே!
புயலின் நடுவே சிக்கிய இந்த
படகினை நீ கரைசேர்க்க மாட்டாயா?

நாவடக்கம் தேவை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எந்தப் பாவத்தாலும் தொடமுடியாத தூய நிலைக்கு உயர்ந்து விட்டதே

கண்டவர்களை எல்லாம் உயர்த்திவிட்ட கழுவிக் கொள்ள முடியாத பாவங்களையே பாம்புச் சட்டையைப் போல் கழற்றி எறிந்து விட்ட தி. மு. கழகத்தின் எந்தப் பாவங்களுக்காகவும் இனி மேல் தி. மு. கழகத் தொண்டர் வருந்தவேண்டியதில்லை

இனத்தில் இன மானத்தில் ஏற்பட்டிருக்கும் பாவங்களைக் கழுவித் தொலைப்பதே தன் கடமையெனக் கொண்டவன் கழகக் காளை!

மொழியாம் விழியில்பற்றிப் படரவிருக்கும் பாவத்திரைகளை உரித்தெடுப்பதே தன் உயிர்மூச்செனக் கொண்டிருப்பவன் கழகத் தொண்டன்.

நாட்டோர் தம் நெஞ்சில் செடிகளாய்க் கள்ளிப்புதராய் வளர்ந்து விட்டிருக்கும் கவர்ச்சிப் பாவங்களைக் களைந்தெறிவதே தன் வாழ்வில் காணவிருக்கும் பேரின்பம் என்று உழைப்பவனே தி. மு. கழகத் தீரன்!

இந்த எளிய தொண்டனுக்குப் பதவி என்பதும் பட்டம் என்பதும் கொசுக்காலில் ஒட்டியிருக்கும் தூசுக்குச் சமானம் என்பதை எதையும் தரக்கூடிய இடத்தில் இருக்கும் எம். ஜி. ஆர். புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த எளிய தொண்டன், தலைவனுக்காக சாவானே தவிர தடம் புரள மாட்டான்!

கொள்கைக்காக வீழ்வானே தவிர கொடியவர் பின் செல்ல மாட்டான்!

அவன். அய்யாவின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவன்

அண்ணாவின் தொண்டால் கவரப்பட்டவன்!

அதனால்,

இரவுக் காலக் கவர்ச்சிப் பொருளாம் அரிதாரப் பூச்சுக்கு அடிமையாக மாட்டான்

சுற்றி இருப்பவர்கள் எல்லாருமே சோரம் போனவர்களாக இருப்பதால் நாட்டில் உத்தமர்களே இல்லையென நடிக முதல்வர் கருதி விட்டார் போலும்!

இருப்பவர்கள் அனைவரும் இரசிகர்களாக இருப்பதால், எதையும் சிந்திப்பவர்களே நாட்டில் கிடையாது என்று நடிக முதல்வர் நம்பிவிட்டார் போலும்!

நரிக்கு நாட்டாண்மை கிடைத்து விட்டதாலேயே உலகத்தில் சிங்கங்கள் எல்லாமே செத்துப் போய் விட்டனவா என்ன?

கோழைகள் எல்லாமே தனக்குக் கும்பிடுபோடுவதால் வீரர்கள் அனைவருமே வீழ்ந்து விடுவார்களா, என்ன!

நடிகர் எம். ஜி. ஆருக்கு ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்!

அரசியலைச் சிவப்பு விளக்கு பகுதியாக மாற்றிவிட வேண்டாம்!

அது முடியாதென்றால்,

ஆளைப்பார்த்துக் கூப்பிடுவாவது பழகிக் கொள்ள வேண்டும்.

அதுவரை;

நடிக முதல்வருக்கு நாவடக்கம் தேவை!

இங்கும் எழுச்சிக் குரல் எதிரொலித்தால்...!

இப்பொழுது அனைத்து மாநிலங்களும் சங்கிலித் தொடர் போல நிதிப் பற்றுக் குறைக்கு ஆட்பட்டுள்ளன. பெரும்பான்மையான மாநிலங்கள் ஒரே நோக்கோடு மத்திய ஆட்சியைக் காண முடிவதில்லை. மாநிலங்களில் பொருளாதாரச் சூழ்நிலை, மேலும், மேலும் தாழ்ந்து கொண்டு போவதால் அரசியல் குழப்பத்திற்கு அவை ஆட்பட்டு விடுகின்றன

அனைத்து மாநிலங்களின் நிதிப் பற்றுக்குறை 1979 ஆம் ஆண்டு முடிவில் ரூபாய் 762 கோடிக்கு மதிப்பிடப்பட்டுள்ளது 1951-52 ஆண்டு மாநிலங்களின் கடனைத் தீர்க்கும் வகையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 21 கோடியாக இருந்தது. 1960–61இல் 251 கோடி ரூபாயாக வளர்ந்து 1976-77 ஆம் ஆண்டில் 1615 கோடி ரூபாயாக உயர்ந்து எவரெஸ்ட் சிகரம் போல் காட்சி தருகிறது.

பல்வேறுபட்ட மாநிலங்கள் தாம், பட்டு விட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் தங்களுடைய வருவாய் நிதியின் 73 சத விகிதத்தைச் செலவழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. குறிப்பாகச் சொல்வதானால் காஷ்மீர், பீகார், அசாம், ஒரிசா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் கடனைத் தீர்க்கும் செலவினம் தம்முடைய வருவாய் நிதியை விட உயர்ந்து விட்டன.

இந்த நிலை ஏற்பட்டுவிட்டதால் மாநிலங்கள் அனைத்தும் மத்திய அரசின் கொத்தடிமைகளாகி விட்டன. மேலும் மத்திய அரசின் மாநிலங்களின் மீது செலுத்தும் நிதி ஆதிக்கம் பலப்பட்டே வருகின்றது. இந்நிலை தொடருமானால், காலத்தோடு மத்திய அரசின் நிதிஉதவி கிடைக்காவிட்டால் மாநிலங்கள் அனைத்தும் திவாலாகிவிட நேரிடலாம்.

இந்தக் கொத்தடிமை நிலையை எதிர்த்துக்குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டது மேற்கு வங்க அரசு தென்மாநில முதலமைச்சர்கள் மட்டுமின்றி சரண்சிங்கை, ஆதரிக்கின்ற வடநாட்டு மாநில முதலமைச்சர்கள்கூட தம்முடைய மாநிலங்களுக்கு பொருளாதார சுயாட்சிக்காகப் போராடப்போவதாகத் தெரிகிறது.

சா. கணேசன்

இந்தச் சுயாட்சிக் கோரிக்கை இன்றைக்கு செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கலாம். தொழிற்துறையையும், வணிகத்தையும் தலைமை தாங்கி நடத்துகின்ற தலைமை அமைச்சர் மத்தியிலிருந்து கொண்டு தேசிய வருமானங்களை அபகரித்துக் கொண்டு மாநிலங்களுக்கு சிறுசிறு துளிகளாக அளிப்பதை விரும்புகிறார்.

காலனி ஆதிக்க மனப்பான்மை மடிந்துவிட்டபோதிலும் மத்திய அரசைப் பொறுத்தவரை இந்த ஆக்கிரமிப்பு மனப்பான்மையை விட்டுவிடத் தயாராக இல்லை

உண்மையில் இந்தப் பிரச்சினை நிதி அமைச்சருக்கு உருவாகவில்லை. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் அரசினுடைய வளத்தை பொறுத்தவரை பெரும்பான்மையாக செயற்கையாக இரு கூறாக்கப்பட்டிருக்கின்றது. உணவுப் பற்றுக் குறை காரணமாக பட்டினி கிடக்கின்ற மக்களுக்கும் தங்களுக்கும் இடையில் பகைமையான முரண்பாடுகள் இல்லை என்று தாங்கள் கொள்ளையடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உணவுப் பொருள்களை சேகரித்து முடக்கம் செய்கின்ற சமூக விரோதமான வணிகர்கள் கூறுகின்றனர்.

ஆகையால் மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் வளர்ந்து வரும் மோதல்கள் தவிர்க்க முடியாதவையாகி விட்டன அதிகார வர்க்கத்திற்கும், காவல் துறைக்கும், இராணுவத்திற்கும் நாளும் வளர்ந்து வரும் செலவினங்களுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் அதிகமான நிதி வாய்ப்பைப் பெருக்க வேண்டியுள்ளது. ஆறாவது திட்டத்தை அமுல் படுத்தும்போது,

மத்திய அரசின் வரிச் செலவுகள் கூடுவதால் வரிச்சுமை மக்கள்மீது மேலும் சுமத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி மாநிலங்களில் உள்ள மக்களும் அவற்றின் அரசுகளும் மத்திய அரசு சுமத்தும் சுமையால் எரிச்சல் ஊட்டப்படுகின்றன.

நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கு ஒதுக்குவதில் ஓரவஞ்சனை காட்டப்படுகிறது. அதோடு மட்டுமின்றி மாநிலத்திற்கு மாநிலம் ஒரே மாதிரியான தொழிற்சாலைகளின் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்படும் விலைகளில் கூட மத்திய அரசு வேற்றுமை காட்டுகிறது சர்க்கரைக்கும், அரிசிக்கும், கோதுமைக்கும் விலை நிர்ணயம் செய்வதில் தென்மாநிலங்கள் மட்டுமின்றி மேற்கு வங்கமும் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் நியாயபூர்வமான இலாபம் அடைவதை மத்திய அரசு இழக்கச் செய்ய வைக்கின்றது இது ஒரு வெளிப்படையான சான்றாகும்.

ஆந்திராவில் லெவி சர்க்கரையின் விலை மற்ற மாநிலங்களை விடக் குறைவாகவே உள்ளது. அந்த மாநிலத்தின் சிறு தொழில் அமைச்சர் அண்மையில் இதை அறிவித்துள்ளார். சட்டப்பேரவையில் மேலும் அமைச்சர் அறிவிக்கின்றார். 'லெவி சர்க்கரைக்கு தற்போது நிர்ணயித்துள்ள விலையை கூடுதலாக்கும்படி வற்புறுத்தப் போகிறோம். மத்திய அரசு இதற்கு இணக்கம் தெரிவிக்கவேண்டும். இல்லையெனில் உயிர்போகும் வரை உண்ணா நோன்பு இருந்தே தீரவேண்டும்.'

தமிழகத்திலும் ஆந்திராவிலும்–சீராக நடைபெற்று வரும் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்துவரும் சர்க்கரைக்குக் குறைந்த விலையே பெறுகின்றன. ஆனால் அதே நேரத்தில் தகுதியற்றதும் உபயோகத்திற்கு இலாயக்கற்றதுமான உத்திரப்பிரதேச மாநிலத்தின் சர்க்கரை ஆலைகள் தயாரிக்கும் சர்க்கரைக்கு அதிகமான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதே! இந்த ஓரவஞ்சனை தென் மாநிலங்களுக்குக் காட்டப்படுவது ஏன்?

அரிசிக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 77 என்று நிர்ணயம் செய்துள்ள மத்திய அரசு கோதுமைக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 112-50 என்று விலை நிர்ணயம் செய்துள்ளதே காரணம் என்ன?

தென் மாநிலங்கள் அனைத்தும் அரிசியை உற்பத்திச் செய்கின்றன. வடமாநிலங்களோ கோதுமையையே பெரும்பாலும் உற்பத்திச் செய்கின்றன. அதுதான் காரணமாகும் என்பதை வெளிப்படையாகவே இந்த விலை நிர்ணயம் தெளிவாகவே காட்டுகின்றது தெற்குக்கு ஒரு நீதியும வடக்கு ஒரு நீதியும் மத்திய அரசு தீர்ப்பு வழங்குவது ஏனோ

பொது சந்தையில் நல்ல தரமான அரிசியின் விலை ஒரு கிலோ நான்கு ரூபாய் சாதாரணமான தரத்தின் அரிசி விலை ரூபாய் இரண்டரையும் ஆகும். இருந்தாலும் அரிசிக்கும் கோதுமைக்கும் மத்திய அரசு அளிக்கிற விலை ஒரே நிலையில் இருப்பது அரிசி உற்பத்தியாளர்களுக்கு வஞ்சனை செய்யும் போக்கையே இது எடுத்துக்காட்டுகிறது.

நெல் விளைச்சல் அதிக உழைப்பைவாங்குகிறது. அதிகமாக நிலத்தை உழ வேண்டி உள்ளது. தினமும் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிடவும் வேண்டும.

கோதுமை பயிர் இடுவதற்கு மூன்றோ அல்லது நான்கு முறையோ நிலத்திற்கு நீர் பாய்ச்சினால் போதுமாம். நிலத்தைப் பதப்படுத்த அதிகமான தொல்லைகள் இல்லை. கோதுமையைப் பயிரிடுதலுக்குத் தேவையான உழைப்பைபோல் இரண்டு மடங்கு உழைப்புத் தேவைப்படுகிறது நெல்லைப் பயிரிடுவதற்கு மத்திய அரசு கோதுமை பயிரிடுவோர்க்குகாட்டும் ஆதரவை நெல்லைப் பயிரிடுவோர்க்குக் காட்டுவதில்லையே.

இதனால் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு நூற்றுக் கணக்கான கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது. மறு

(தொடர்ச்சி 12-ம பக்கம்)

எங்கிருந்து வந்தது இந்தப் பணம்?

நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் கட்ட வேண்டிய வரிபாக்கி 13 இலட்சத்து 17 ஆயிரத்து 722 ரூபாயையும் கட்டிவிட்டதாக நாடாளுமன்ற மேலவையில் மத்திய அமைச்சர் தகவல் தந்திருக்கிறார்

நீண்ட நெடுங்காலமாக வரி பாக்கியை வைத்துக்கொண்டிருந்த இந்த நடிகர் முதலமைச்சர் ஆனபின் இப்பொழுது திடீரென்று மொத்தப் பணத்தையும் எப்படி கட்டினார்?

இந்தத் தகவல், தமிழ்நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது! சினிமாவில் அவர் சம்பாதித்ததையெல்லாம் வாரி வாரி வழங்கியதனால் வரி செலுத்த முடியவில்லை. இருக்கின்ற சொத்துக்களை விற்றுத்தான் கட்ட வேண்டும். அதையும் மத்திய அரசின் அனுமதியில்லாமல் விற்க முடியாது என்றெல்லாம் நடிகர் தரப்பிலிருந்து கூறப்பட்டது.

'நடிப்புத் தொழிலை விட்டுவிட்டதால் வரி பாக்கியைக் கட்ட முடியவில்லை எனவே மீண்டும் சினிமாவில் நடிக்க அனுமதிக்க வேண்டும்' என்று தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கு நடிகர் இராமச்சந்திரனே கடிதம் எழுதியிருந்தார்.

இவ்வளவும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்த நிலைமை. ஆனால் திடீரென்று இப்பொழுது செய்தி தரப்படுகிறது. வரி பாக்கியே இல்லை; எல்லாவற்றையும் கட்டி விட்டார் என்று

இந்தப் பதினைந்து இலட்ச ரூபாயை எப்படிச் சம்பாதித்துக் கட்டினார் நமது முதல்வர்? யாராவது அவருக்காகக் கடனாகக் கொடுத்தார்களா? அல்லது அவர் நடிக்க இருக்கும் படங்களின் முதலாளிகள், முன்கூட்டியே அவருக்கு இந்தப் பணத்தைக் கொடுத்தார்களா? அல்லது அண்மையில் ஏதேனும் சொத்துக்களை அவர் விற்றாரா?

எல்லாம் மர்மமாகவே உள்ளது' வரிபாக்கி இல்லை என்று தெரிவித்த மத்திய அரசே, பணம் வந்தவிதத்தையும் விசாரித்து அறிந்து விளக்கினால் சந்தேகங்கள் நீங்கும். சத்தியா புத்திரர்' 'சத்தியபுத்திரர்'தான் என்றுவது நாட்டு மக்கள் நம்பும்படி செய்யலாம்.

அ.தி.மு.க. ஆட்சியின் இயலாமை!

கேள்வி: கல்லூரிகளை மூட அரசு உத்தரவிட்டுள்ளதே அதுபற்றி...?

வசு: அது இன்றைய ஆட்சியாளர்களின் இயலாமையைக் குறிக்கிறது மாணவர்கள் போராட்டத்தில் குதிக்கிறார்கள் என்றால் அதைச் சுமுகமாகத் தவிர்ப்பதற்கு என்ன வழி என்று ஆராய்ந்து அதில் ஈடுபட வேண்டும் அதை தவிர்த்து கல்லூரிகளை எல்லாம் மூடிவிட்டு ஒட்டுமொத்தமாகப் படிக்கின்ற மாணவர்கள் எல்லோருக்கும் பாதிப்பு ஏற்படுத்துவது என்பது என்ன நியாயம்?

—மாணவி வசுதாரணி

வலது கம்யூனிஸ்டுகளின் அரசியல் பித்தலாட்டம்!

"தமிழ்நாட்டில் முதலமைச்சர் எம் ஜி ஆர் தலைமையில் இயங்கிவரும் அரசு ஒரு இடதுசாரி ஜனநாயக அரசு அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். அ தி மு க அரசு விவசாயி போராட்டத்தில் நடந்துகொண்டிருக்கும்முறையும் குறிப்பாகத் தொழிலாளர்கள் பிரச்சினையில் காட்டிவரும் அசட்டைத் தனமும் மாணவர்கள் மீது பரிவில்லாமல் நடந்துகொள்ளுகின்ற தன்மையும் எந்தப் பிரச்சினையிலும் அனுதாபம் இல்லாத முறையில் நடப்பதும் இதற்கு உதாரணமாகும்..."

— இவ்வாறு விமர்சனம் செய்யும் வ கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான மோகித்சென் இவ்வளவையும் கூறிவிட்டு —

"அ தி. மு க. ஆட்சியை நாங்கள் ஒரு பிற்போக்கான அரசு என்று சொல்லாவிட்டாலும்..." என்கிறார்.

அதாவது —

ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாத 'அலி' போன்றது அ. தி. மு. க. ஆட்சி என்கிறார்

"இங்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெறாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடப்பதற்காகவே அ. தி மு க. ஆட்சியை நாங்கள் விரும்புகிறோம்......" என்கிறார் மோகித்சென்

பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு க. ஆட்சியின் மீது கற்பனையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி 'ஜனாதிபதி ஆட்சியே வா!...! வா...' என்று உடுக்கடித்தவர்கள் — இன்று ஜனாதிபதி ஆட்சி நடைபெறாததாலேயே அ. தி மு க. ஆட்சியை ஆதரிக்கிறார்களாம்

"நாங்கள் கொள்கையின் மீது நம்பிக்கை உடையவர்கள் என்று 'தோள் தட்டும் வ கம்யூனிஸ்ட் கட்சியினர், "அ தி. மு. கவுடன் மதுரை மாநகராட்சித் தேர்தலில் எங்கள் கட்சி உறவு வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் நாங்கள் வெற்றி பெற வேண்டும்" என்றும் கூசாது கூறியுள்ளார்கள்.

அதாவது —

எப்படியாவது — யாருடன் சேர்ந்தாவது — வெற்றிபெற வேண்டும் என்பதுதான் இன்றைய வ. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை

சில சீட்டுகள் கிடைக்க வேண்டுமே என்பதற்காக மாபெரும் தலைவர் லெனினோடு ஆர்டர் எம். ஜி ஆரை ஒப்பிடத் தயங்காத கல்யாணசுந்தரம் போன்றவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சியிடமிருந்து 'எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்பதைத் தவிர வேறு எம்மாதிரியான கொள்கையை எதிர்பார்க்க முடியும்?

—ஜாகீர்

புதுவை இராமச்சந்திரனுக்குப் 'புனிதர்' இடும் கட்டளை என்ன?

புதுவை மாநில அரசில் உயர்தர அதிகாரியாக உள்ள இராதாபாய் என்னும் பெண்மணி, தமது கற்புக்குக் களங்கம் விளைவிக்க முயன்றதாக மூவர்மீது குற்றஞ்சாட்டி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரினார். உரிய பலன் கிடைக்கவில்லை. உண்ணாநோன்பும் இருந்து பார்த்தார்; ஒன்றும் நடக்கவில்லை. முதல்வர் இராமசாமி இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதிமொழியையும் நிறைவேற்றவில்லை.

காரணம், குற்றச்சாட்டுக்குரியவர்களில் ஒருவர் அமைச்சர்; மற்றொருவர் ஐ. ஏ. எஸ். அதிகாரி; இன்னொருவர் ஓர் உயர்தர அதிகாரி. இந்த மூவரையும் விசாரிக்கப் புதுவை அ. தி. மு. க. முதல்வருக்குத் துணிவில்லை.

உண்ணாநோன்பிருந்த இராதாபாயின் உயிரைக் காப்பாற்ற, அனைத்துக் கட்சித் தலைவர்களும் முயற்சி மேற்கொண்டனர். தலைமையமைச்சர் மொரார்ஜிதேசாய்க்கும் தந்தி அனுப்பப்பட்டது. இந்தக் கட்டத்தில் புதுவை ஆளுநர் குல்கர்னி விடுமுறையில் சென்றுவிட்டதால் புதுவை ஆளுநர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட தமிழக ஆளுநர் பட்வாரியிடம் முறையிடப்பட்டது.

கடைசியாக, தமிழக ஆளுநர் பட்வாரி, இராதாபாயின் புகாரை ஏற்று மேற்சொன்ன மூவர்மீதும் விசாரணை நடத்துமாறு ஆணைபிறப்பித்துள்ளார்.

விசாரணை நடைபெற இருப்பதை முன்னிட்டு அமைச்சர் இராமச்சந்திரன் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்காளான அமைச்சரோ பதவி விலக மறுத்து, விசாரணை நடத்த ஆணை பிறப்பித்த முறையே சரியில்லையென வாதாட முற்பட்டிருக்கிறார்.

கட்சித் தலைவர் எம்.ஜி. ஆரும், புதுவை முதல்வர் இராமசாமியும் என்ன சொல்கிறார்களோ அதன்படிதான் நடப்பேன்' என்றும் கூறியுள்ளார்.

புனிதர் எம். ஜி. ஆர். இதுவரை புதுவை விவகாரம் குறிந்து வாய் திறக்கவில்லை.

குற்றம் செய்தவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று 'வீர வசனம்' பேசிவரும் 'புனிதராஜ்ய' முதல்வர், 'புதுவை ராஜ்ய'த்தில் நடந்ததாகக் கூறப்படும் இந்த அக்கிரமத்தைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை!

இதற்கிடையில் 'விசாரணையைச் சந்திக்கத்தயார்' என்றும் முழங்கியிருக்கிறார் புதுவை அமைச்சர் இராமச்சந்திரன்! இதன் உட்பொருள் என்ன? புனிதர் இராமச்சந்திரன் புதுவை இராமச்சந்திரனுக்கு என்ன கட்டளை பிறப்பிப்பார் என்பது நமக்குத் தெரியாதா?

"'விசாரணை நடைபெறும் வரை பதவியிலிருந்து விலகி இரு; களங்கத்தைப் போக்கிக் கொண்டு மீண்டும் பதவிக்கு வரலாம்'" என்று கூறும் துணிவு புனிதர் இராமச்சந்திரனுக்கு உண்டா?

'தாய்க்குலத்துக்குக் களங்கம் கற்பிக்க முயன்றவர்களை 'தாய் தடுத்தாலும் விடேன்' என்று சூளுரைத்து, அமைச்சர் இராமச்சந்திரன் உள்பட மூவரும் உடனே பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஆணைபிறப்பிப்பார் என்று எதிர்பார்க்க முடியுமா?

தி. மு. க. அரசுமீது புகார்ப் பட்டியல் கொடுத்தவுடனேயே, தி. மு. க. அமைச்சர்கள் இராஜிநாமா செய்துவிட வேண்டும் என்று ஊரையே அமர்க்களப்படுத்தியவர்களாயிற்றே நடிகர் கட்சியினர்!

அப்படிப்பட்டவர்கள் தங்கள்மீது விசாரணை நடத்த ஆணைபிறப்பிக்கப் பட்டும், பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கலாமா? நடக்கப் போவது என்ன? பொறுத்திருந்து பார்ப்போம்.

'சேனு'

(10–ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசு ஆண்டுதோறும் ஐம்பது இலட்சம் டன் கோதுமையை விலைக்கு வாங்குகிறது ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் இருபது கூடுதல் விலையைக் கொடுத்து வாங்குவதன் மூலமாக கோதுமை பயிரிடும் வடநாட்டு விவசாயிகள் நூறு கோடி ரூபாய்க்கு மேலும் இலாபத்தை அடைகிறார்.

மத்திய அரசின் வட நாட்டுத் தலைவர்களின் ஓர வஞ்சனைப் போக்கையும் நடவடிக்கையையும் காணும்போது வருத்தமும்வேதனையுமே உண்டாகின்றன. நாட்டின் ஒற்றுமைக்கு இந்தி மாதிரியான நடவடிக்கைகள் எங்கே உலை வைத்துவிடுமோ என்றே அஞ்சவேண்டியிருக்கின்றது ஏனெனில் இந்தப் போக்கின் நடவடிக்கைகள் கர்நாடக மாநில சட்டமன்ற மேலவையில்எதிரொலித்துள்ளன மத்திய அரசிலும் பெரும்பாலான மாநிலங்களிலும் இன்றைய தினம் ஆளும் கட்சியாக உள்ள ஜனதா கட்சியின் உறுப்பினர் தோழர் தயானந்த் சாகர் உள்ளக் குமுறலைக் கொட்டியுள்ளார்

"மாநிலங்களை முனிசிபாலிட்டிகள் மாதிரி மத்திய அரசு நடத்தக்கூடாது. எங்களுடைய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு நாங்கள்.மத்திய அரசிடம் பிச்சை எடுக்க விரும்பவில்லை' இந்நிலை நீடிக்குமானால் தென்னாட்டு மாநிலங்கள் தங்களுக்கென ஒரு தனி அரசை அமைத்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம்" என்றும் மேலவையில் அந்த ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர் குறிப்பிட்டார் மேலும் தனது உரையில் குறிப்பிடுகிறார்.

"தென்னகத்தைப் பற்றி வடநாட்டு மக்கள் தங்கள் போக்கினை மாற்றிக்கொள்ளாவிட்டால் தென்னாட்டு மாநிலங்கள் தங்களுக்கென ஒரு தனி அரசை அமைத்துக் கொள்ள நேரிடும் தென்னாட்டு மக்களை வடநாட்டு மக்கள் எப்போதுமே அலட்சியத்துடன் நடத்தி வருகிறார்கள். பின்னர் மாநிலங்களின் நெகிழ்ச்சியான கூட்டாட்சிதான் இருக்க முடியும். நாட்டுப் பாதுகாப்புப் போன்ற பிரச்சினைகளில் மத்திய அரசை அது ஆதரிக்கலாம் என்றும் கூறினார்.

இது எதைக் காட்டுகிறது? மொழிப் பிரச்சினையில் மட்டுமல்ல நிதிப் பிரச்சினைகளில் கூட மத்திய அரசும் வடநாட்டுத் தலைவர்களும் ஆதிக்க மனப்பான்மையோடு நம்மை ஆண்டு வருவதால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் தென்னகத்திற்கு தனி அரசு வேண்டும்என்று முழக்கமிடுகிற நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டனர். தயானந்த சாகர்களின் எழுச்சிக் குரல் தென்னகத்தில் எதிரொலித்தால்......'

அடுத்த இதழில்
கலைஞர் எழுதும்
"தொடர்கதை"
குறுநாவல் இடம்பெறும்.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

நச்சு இலக்கியவாதிகளும்! நச்சு அரசியல்வாதிகளும்!

தமிழ்நாடு முற்போக்கு இலக்கிய வாதிகள் ஒன்றுகூடி கோவையிலே ஒரு மாநாடு நடத்தியுள்ளனர். அவர்களுக்கே யுரிய பாணியில் தமிழிலக்கியத்தை அலசி ஆராய்ந்துள்ளனர்

முற்போக்கு இலக்கிய மெது—பிற்போக்கு இலக்கிய மெது என்பதை அங்கு தெளிவுபடுத்தியுள்ளனர் சிறு கதைகள், நாவல்கள், கவிதைகள் கட்டுரைகள் என்பதோடு நில்லாமல் சினிமா நாடகக் கதைகளையும் விமர்சித்துள்ளனர்

எமர்ஜென்ஸி காலத்தில் 'பல்லாண்டு' பாடியவர்களையும் சாடியிருக்கின்றனர்.

நச்சிலக்கிய மெது? நல்லிலக்கிய மெது? என்பதனை மாநாட்டில் விளக்கியதோடு நில்லாமல் அதற்குக் காரணமான மணியனையும், கண்ணதாசனையும் ஜெயகாந்தனையும் நேரிடையாகவே பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் இலக்கியங்களைச் சாடியுள்ளனர்.

அவர்களால் தமிழிலக்கியம் பாழானது என்றும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

"இன்று மக்கள் வாழ்விலுள்ள பிரச்னைகளை மூடி மறைத்து அவர்களது சிந்தனைகளை மழுங்கடிக்கும் முயற்சியிலான கதைகளும், இன்றைய சமுதாயத்தை நியாயப்படுத்தும் படைப்புகளுமே இந்த எழுத்தாளர்கள் உருவாக்கிவிடும் இலக்கியங்கள். பாலுணர்வை அசிங்கமான முறையில் கொச்சைப்படுத்தி அந்த உணர்வின் விகாரத்தையே சித்தரித்து வியாபாரம் செய்யும் இல்க்கியங்களே இவை. மணியன், கண்ணதாசன் உள்ளிட்டு பல எழுத்தாளர்கள் ஏடுகள் உதாரணம்"

என்று பகிரங்கமாகவே சாடியுள்ளனர். இத்தகைய நச்சிலக்கியவாதிகளில் முன்னவர் புனிதரின் இதயத்தோடு பேசிக்கொண்டிருக்கும் மணியனுவார்!

பின்னவரோ புனித ராஜ்யத்தில் புனிதரால் நியமிக்கப்பட்ட 'ஆஸ்தானக் கவிஞர்—' அரசுக் கவிஞராவார். தமிழிலக்கியத்தைப் பாழ்படுத்தும் நச்சிலக்கியவாதிகள் யாராக இருந்தாலும் கண்டிக்கத் தக்கவர்களே! இத்தகைய ஆபாச இலக்கியவாதியான ஒருவரை அரசு கவிஞராக நியமித்த அரசை, முற்போக்கு இலக்கிய வாதிகள் கண்டித்திருக்க வேண்டாமா?

மாருக அந்த ஆட்சிக்கு 'சாமரம்' வீசி 'லாலி பாடிக் கொண்டிருப்பதேன்?

'எம்.ஜி யாரை' பகைத்துக் கொண்டால் சட்ட மன்றத்திலே சில சீட்டுகள் கிடைக்காது!

நகராட்சியிலே சில வார்டு களைப் பிடிக்க முடியாது!—என்ற பயம் அவர்களுக்கிருக்கிறது என்று எண்ணிடத் தானே தோன்றுகிறது.

நச்சிலக்கிய வாதியைக் கண்டித்ததோடு நிற்காமல் நச்சிலக்கிய வாதியை அரசுக் கவிஞராக நியமித்த புனித ராஜ்யத்தின் அமைச்சர்கள் இருவரையும் அழைத்திருந்தனராம் முற்போக்கு இலக்கிய வாதிகள்.

அவர்களும் மறுப்புக் கூறாமல் வந்து கலந்துகொண்டு மாநாட்டில் வாழ்த்திப் பேசினார்களாம்.

பூரித்துப் போகிறார்கள் முற்போக்கு இலக்கியவாதிகள்! என்னே இவர்களின் 'முற்போக்கு!' நேரத்திற்கேற்றாற் போல், இடத்திற்கு தகுந்தாற்போல் பேசி நடித்திடும் வேடதாரிகளை மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்!

—குடியேற்றம்
ஏ. சுப்ரமணியம்

புனித ராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

வேற பத்திரிகை வாங்கித் தான் பார்க்கணும்...

பொடியன்: மூடிய மில்களை அரசே ஏற்று நடத்துவது...

சொக்கி: மூடு வாயை! அதைப் பற்றி பட்ஜெட்டில் யாரும் வாயே திறக்கவில்லை'...நீ ஏன் உன் வாயைத் திறக்கிறாய்?...

பொடியன்; போன வாரம் அறிவித்தாரே ஒரு மந்திரி; நெசவாளர் வீடுகளில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப்படுமென்று; அதாவது பட்ஜெட்டில் இருக்கிறதா?

சொக்கி: இல்லே! இல்லே' இந்தா நீயே படிச்சுக்கோ!...

(பத்திரிகையை அவன் கையில் கொடுக்கிறாள்)

பொடியன் பத்திரிகையை வாங்கிஆவலுடன் பார்து...

பொடியன்: அடா! அடா! அடா! ...எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதோ பத்திரிகையிலே புதுப்பட விளம்பரம் இருக்கே'...சொக்கி! பட்ஜெட்டாவது ஒண்ணாவது!...இந்தப் படத்தைப் பார்த்துகிட்டே இருந்தா போதும்...நம்ப பாமர ஜனங்களுக்கு...பார்த்தால் பசி தீரும்!

(பொடியன் பாடத் தொடங்குகிறான்)

(பாட்டு)

"பார்த்தால் பசி தீரும்
ஒரு படத்தைப்
பார்த்தால் பசி தீரும்!
பட்ஜெட் என்பது எதற்கு?
அதனால் பலன்தான் எதற்கு?
பார்த்தால் பசி தீரும்—
ஒரு படத்தைப்
பார்த்தால் பசி தீரும்..."

(சொக்கியும் பாடுகிறாள்)

(பாட்டு)

"தேர்தல் வாக்குறுதி
என்பதெல்லாம்
தில்லுமல்லுதானா?
யார் இதனைக் கேட்பார்
என்ற
அசட்டுத் தைரியம்தானா'
சொல்லு நீ! சொல்லு நீ!
ஊரை ஏமாற்றி
ஓட்டுக் கேட்க
ஓராயிரம்—பொய்யா?
உள்ளதை நான் சொன்னால்
—ஓடுவீர் அய்யா!
நில்லு நீ! நில்லு நீ!"

(பொடியன் ஓடுகிறான்—சொக்கி, சிரிக்கிறாள்)

காட்சி முடிகிறது விளக்கு அணைகிறது. நான்காவது காட்சியை அடுத்த இதழில் காண்க.

காகிதப் பட்டம்தானு?

டில்லி மாநகராட்சி, துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் 'தேவை' என்று அறிவித்தபோது 15,381 விண்ணப்பங்கள் வந்து குவிந்தன; அவர்களில் பட்டதாரிகள் 6,000 பேர்; பிஹெச்.டி (Ph. D) பட்டம் பெற்றவர்கள் முப்பத்தாறு பேர்; இதுமட்டுமல்ல —

முப்பது பட்டதாரிகளும், எம்.ஏ., பட்டம் வாங்கிய நான்குபேர்களும் இந்த மாநகராட்சியில் கடைநிலை ஊழியர்களாகப் (பியூன்) பணியாற்றுகிறார்களாம்.

புறங்காட்டி ஓடாது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்க விரும்புகிறேன் விதண்டாவாதத்திற்காக அல்ல; விளக்கம் பெறவேண்டும் என்பதற்காகவே கேட்கிறேன். அவசர கால நிலை நடைமுறையில் இருந்தபோது இன்றைய அமைச்சர் மனோகரன் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்—அ. தி. மு. க. வின் துணைப் பொதுச்செயலாளர்—அன்று நாடாளுமன்றத்தில் என்ன கூறினார்? அவர்கள் இந்தியின் ஆதரவாளர்கள் என்றும் கலைஞர்தான் இந்திப் பிரச்சினையைக் கிளப்புகிறார் என்றும் கூறவில்லையா? அப்படிக் கூறிய மனோகரன் அமைச்சரான பிறகு தமிழக சட்டமன்றத்தில் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டபோது தலைவர் கலைஞர் அவர்கள் மனோகரனின் நாடாளுமன்றப் பேச்சைச் சுட்டிக்காட்டி கேட்டபோது, மனோகரன் என்ன விளக்கமளித்தார்? "நான் பேசிய ஆங்கிலப் பேச்சை சரியாகபுரிந்துகொள்ளாது எதிர்க்கட்சித்தலைவர் பேசுகிறார். நான் நாங்கள் இந்திக்கு எதிர்ப்பானவர்கள் இல்லை என்றுதான்கூறினேனே தவிர இந்தியை ஆதரிப்பவர்கள் என்று கூறவில்லை' என்று விளக்கம் கூறினார். உடனே தலைவர் கலைஞர் அவருடைய ஆங்கிலப் பேச்சை அப்படியே எடுத்துக்காட்டி "We are for Hindi but he only rakes up Hindi issue" 'நாங்கள் இந்திக்கு எதிர்ப்பானவர்கள் என்று கூறியிருக்க விரும்பினால் எனக்குத் தெரிந்த ஆங்கிலம் "We are not against –Hindi ' என்றுதான் கூறியிருக்கவேண்டுமே தவிர "We are for hindi" என்று கூறியிருக்க முடியாது என்று எடுத்துக்காட்டினார் கலைஞர்தனக்கேஉரியதனைமையுடன் எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் என்று எடுத்துக் காட்டினார். ஆனால்நானாக இருந்திருந்தால் "Mr. Manokaran you better get admitted in nursery school" என்று தான் கூறியிருப்பேன் உண்மை என்னவெனில் மனோகரன் ஆங்கிலம்தெரியாமல் அப்படிக் கூறவில்லை தெரிந்தேகூறினார்.

தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இந்திராகாந்தியை மகிழ்விக்க அன்று தமிழைக் காட்டிக் கொடுத்தார்கள்,

ஆம், அவர்களின் இந்த குறுகிய கால வரலாறு அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள எதையும் யாரையும் காட்டிக் கொடுப்பவர்கள் என்பதையே காட்டுகிறது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எம். ஜி. ஆர் தன்னை வளர்த்த கழகத்தையே காட்டிக் கொடுத்தார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஜனநாயகத்தையே காட்டிக் கொடுத்து விட்டு இந்திராவை ஆதரித்தார். ஆகவேதான் எம். ஜி ஆரின் இந்தி எதிர்ப்பு வெறும் நடிப்பே தவிர உண்மையல்ல என்று நான் கருதுகிறேன்.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
72, அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அசிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009